**CHARTERED ACCOUNTANCY @ VEAL BUSINESS COLLEGE**
Trincomalee
Contact : 0777 555 738

தை மாதம் 20ம் திகதி February 02, 2013

# மலைமுரசு
MALAIMURASU

அறைவு 01 இயம் 28

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## வள்ளம் கவிழ்ந்ததால் வாழ்வை இழந்தனர்

**– சிறுவனும் சிறுமியும் மரணம் –**

குச்சவெளிப் பிரதேசத்தின் புடவைக்கட்டு ஆற்றில் மட்டியெடுக்கச் சென்ற சிறுவர் இருவர் வள்ளம் கவிழ்ந்ததால் பழியாகியுள்ளனர்.

குச்சவெளியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 வயதான பெண் குழந்தை றிஷ்வானாவும் அவரது சகோதரனான (7ம் பக்கம்)

## ஜம்மியதுள் உலமா சபை புல்மோட்டைச் செயலாளர் தாக்கப்பட்டார்



ஜம்மியத்துள் உலமா சபையின் புல்மோட்டைச் செயலாளர் திரு. எச். எஸ். ஷலீஹீன் அவர்கள் தனது வீடு திரும்பும் வழியில் கடந்த ஞாயிறு இரவு (7ம் பக்கம்)

# – ஒளிமயமான தாய்நாடு வளமான நாளை – திருமலையில் சுதந்திர தினம்

## 2,500 விருந்தினர்கள் 100,000 மக்கள்

## 3,000 படைவீரர்கள் அணிவகுப்பு !

## 860 கலாசார கலைஞர்களின் அளிக்கைகள்!!!

### சனாதிபதியின் வருகை 8.45 மணிக்கு – அணிவகுப்புக்கள் 9 மணிக்கு

சுதந்திர தின ஏற்பாடுகள் யாவும் திருமலையின் பிரட்றிக் கோட்டை வளாகத்தில் நிறைவுற்றுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 65வது சுதந்திர தின விழாவிற்கான முக்கிய நிகழ்வினை திருக்கோணமலையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. "ஒளிமயமான தாய்நாடு - வளமான நாளை" என்னும் தொனிப் பொருளில் இவ் 65வது சுதந்திர தின நிகழ்வு நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவிற்கு வெளிநாட்டு இராசதந்திரிகள் உட்பட 2500 ற்கும் மேற்பட்ட விருந்தினர்களைப் பார்வையாளர்களாக அழைத்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 3000 படைவீரர்களும், 55 மாற்றுத் திறனாளிகளான படைவீரர்களும் இராணுவ அணி வகுப்பினை நடாத்தவுள்ளனர்.

முப்படையினர், காவல் துறையினர், பொதுமக்கள் பாதுகாப்புப் படையணியினர், தேசிய கடேற் படையணியினர், தேசிய இளைஞர் படையணியினர் ஆகியோரே இவ்வணிவகுப்புக்களில் அங்கத்துவம் பெறுவர்.

அதற்கு அடுத்த அணிவகுப்பாக இலங்கையின் கலாசாரங்களை உலகிற்கு வெளிக்காட்டும் அணிவகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

16 கலாசாரக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 860 கலைஞர்கள் பங்கேற்கவுள்ள (7ம் பக்கம்)

## திருமலையின் மாவட்ட மட்ட உயர்தர முடிவுகள் !!!

**பொறியியல்துறை :**

01 – 06 இடங்கள் பின் 9 – 12 இடங்கள்
தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

**மருத்துவத்துறை :**

01ம் இடம் :
கிண்ணியா மத்திய கல்லூரி

**கலைத்துறை :**

01ம் இடம் :
கிண்ணியா மகளிர் மகா வித்தியாலயம்

**வர்த்தகத்துறை :**

04ம் இடம் :
தி/இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

## பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சராக சுசந்த !

**– சனாதிபதியின் நியமனம் –**

புதிய அமைச்சரவை மாற்றங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திருமலை (7ம் பக்கம்)

## – நாடு முழுவதும் – 20 பல்கலைக் கழகக் கல்லூரிகள்

முறைசார் கல்வியிலிருந்து வெளியேறும் மாணவர்களை பட்டப்படிப்பிற்கு அனுமதிப் (7ம் பக்கம்)

aat SRI LANKA

2013 ஜூன் பரீட்சைகளுக்கான
மாணவர் பதிவுகள் தற்போது ஆரம்பம்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.

AAT பரீட்சைகள்
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- மூன்று மட்டங்களைக் கொண்டது ஆரம்பநிலை(Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) ...

AAT இறுதிமட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பெறக்கூடிய விலக்களிப்புக்கள்
- இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் (LCASL) CAB-I பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.
- CIMA(UK) மற்றும் ICMA(SL) நிறுவகங்களின் ஆரம்பநிலைப் பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.

விண்ணப்பிக்கும் முறை



Association of Accounting Techinicians of Sri Lanka
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

### சுதந்திர தின அறைகூவல்!

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கியுள்ளது. 65வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் திருக்கோணமலை கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதையொட்டி மாவட்டத்தின் நகரப் பகுதி புதிய மிடுக்குடன் காட்சி தரத் தொடங்கியுள்ளது.

சுதந்திரம் என்பது உணர்வு என்பதை விடுத்து சுதந்திரம் என்பது விழா என்றாகிப் போய்விட்டது. ஒரு நாட்டின் சுதந்திரம் அந்நாட்டின் குடிமக்களிடையே உணர்வு பூர்வமாக கிளர்ச்சியடைந்து பெருகும் நாளை கொண்டாடும் விழா சுதந்திர தின விழாவாக ஆரம்பித்து இன்று சுதந்திர தின விழா என்பது விடுமுறை நாளாக பெருமளவு மக்களால் உணரப்பட்டு விட்டது.

எவ்வளவு தப்பான சிந்தனை!

இந்தச் சிந்தனையால்தான் நாம் ஏனைய நாடுகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றோம். எமது மாவட்டத்தின் குழந்தை வறுமையால் வேறு நாடொன்றிற்குச் சென்று நிரூபிக்கப் படாத குற்றத்திற்காக சிரச்சேதம் செய்யப்பட்டதை வெறும் செய்தியாக வாசித்து அக் கணத்தில் அதிர்ச்சி யடைந்துவிட்டு பின் அவளை மறந்து சொந்த வாழ்வுப் பயணத்தைத் தொடரச் செய்யும் மனோநிலையை இந்தச் சிந்தனை தான் இலங்கையருக்குத் தந்துள்ளது.

சுதந்திரம் என்பது உணர்வு! அதனை நீங்கள் பெற்று விட்டீர்கள் என்று வேறு எவரும் சொன்னால் அதைப் புரிந்துகொள்ள முடியாது... முடியுமா உங்களால்? இல்லவே இல்லை. அந்த உணர்வை ஆத்மார்த்தமாக அனுபவிக்க மட்டுமே முடியும். உங்களுக்கு இப்போது பசிக்கிறது என்று யாராவது ஒருவர் சொன்னால் நீங்கள் அவ்விடத்திலேயே நகைப்பீர்கள் அல்லவா? அவ்வாறே பசி போல, கோபம் போல, காதல் போல சுதந்திரமும் ஒரு உணர்வு. அந்த உணர்வை அடுத்தவர் நமக்குத் தர முடியாது. நம்மால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த உணர்வு முற்று முழுதாக வடிந்துவிடும் போது அந்த நாளை ஒரு விடுமுறை நாளாக அனுபவிக்கத்தானே உள்ளம் ஏங்கும்....!

சுதந்திர உணர்வு வற்றிப்போகும் போது நாம் இலங்கையர் என்ற உணர்வு நீங்கி நாம் இந்த, இந்த இனத்தவர் என்ற பிரிவுகளாகிப் போகின்றோம். பின்னர் இன்னும் சுதந்திர உணர்வு வற்ற, வற்ற அந்த இனப் பிரிவினுள் மதப் பிரிவு, அதனுள் சாதீயப் பிரிவு, பின் உறவு எனப் பிரிவு. அவ்வுறவுப் பிரிவினுள்ளும் தனித்துப் பிரிந்து போய் மனிதன் வாழத் தொடங்கிவிடுகின்றான்.

பிரிந்தவன் வலுவற்றவன்..... சுதந்திர நிலையற்றவன்....

இலங்கையர் நாம் என்ற ஒரு உணர்வு பொங்கிப் பிரவகிக்கும் நாள் என்றோ அன்றே எம் உண்மைச் சுதந்திர நாள்! அதை ஆங்கிலேயர் தரவேண்டாம்.... நாமே உணர்ந்து கொள்வோம்

-ஆசிரியர்-

## உள்ளூராட்சி எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் முன் மக்களை மீளக் குடியமர்த்துக...

**துரைரெட்ணசிங்கம்**



வடக்கு கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்த பின்பே உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்ய வேண்டும் என திருமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்கள் இன்னும் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியமரவில்லை. அதுபோன்று வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னும் மீள்குடியமர்த்தப்படவில்லை. மேலும், திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு பிரதேசத்தில் சம்பூர், கூனித்தீவு, நவரத்தினபுரம், கடற்கரைச்சேனை போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னும் முகாம்களில் உள்ளனர். இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லைகளை மீள்நிர்ணயம் செய்யமுடியாது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் உள்ளூராட்சி மன்ற எல்லைகளை மீள்நிர்ணயம் செய்யும் விடயம் தொடர்பில் அக்கறையற்ற நிலையில் இருக்கின்றார்கள். எனவே இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்திவிட்டு உள்ளூ-ராட்சிமன்ற எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதே பொருத்த-மானதாக இருக்கும்" என்றார்.

## சட்ட விரோத அவுஸ்திரேலியப் பயணிகளின் படகு உடைந்து இருவர் பலி!




இலங்கைத் தீவிலிருந்து சட்டவிரோதப் பயணிகள் இருபத்திமூன்று பேருடன் பயணித்த படகொன்று இந்தோனேசிய ஜாவாத் தீவுகளுக்கு அருகில் விபத்துக்குள்ளானதில் அப் படகிற் பயணித்த இருவர் மரணமாகியுள்ளனர் என "த அவுஸ்திரேலியன்" செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

அத்துடன் மற்றொருவர் இவ் விபத்தில் காணாமற் போயுள்ளதாகவும் தெரிய வருகின்றது. எஞ்சிய இருபது பயணிகளில் முறையே நான்கு மற்றும் 10 வயதுடைய குழந்தைகள் இருவரும் இருப்பதாகவும் அவர்கள் அனைவரும் இந்தோனேசியாவின் நூசா கம்பன்கன் தீவில் தற்போது மீனவர்களால் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. அவர்களுள் இருவர் நூசா கம்பன்கன் தீவின் தலைநகர் 'சிலாகப்' பின் வைத்தியசாலைக்கு மேலதிகச் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்-பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவை நோக்கிப் பயணித்த அவர்களது படகு இயந்திரக் கோளாறு காரணமாக ஜாவாத் தீவுகளை அண்டிய கடற் பிரதேசத்தில் பாறைகளுடன் மோதுண்டு உடைந் துள்ளது.

நூசா கம்பன்கன் தீவிலேயே இந்தோனேசியாவின் பெருமளவு சிறைக்கூடங்கள் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இங்கிருந்து அவர்கள் மற்றொரு தீவிற்கு மாற்றப்படவுள்ளனர்.

அம் மற்றைய தீவான செமரங் தீவிலேயே குடியேற்றவாசிகளுக்கான தடுப்பு நிலையம் உள்ளது.

விடயம் இவ்வாறிருக்க சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நோக்கிப் பயணமாகிப் பின் சுய விருப்பில் நாட்டுக்குத் திரும்பி வருபவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியுள்ளதாக இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியத் தூதரகம் தெரிவித்துள்ளது. கடந்த வாரமும் சுமார் 13 சட்டவிரோதவாசிகள் தாமாகவே விரும்பி இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். இவர்களுடன் சேர்த்து மொத்தமாக 942 பேர் இலங்கை வந்தடைந்துள்ளனர். இத்தொகையினுள் 213 பேர் தாமாகவே முன்வந்து நாட்டுக்குத் திரும்பியவர்களாக இருக்க ஏனைய அனைவரும் பலவந்தமாக நாட்டுக்குத் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர்.

## ரிசானா வாழ்ந்த குடிசையை உடைக்க வேண்டாம் !

**– தாயார் வேண்டுகோள் –**

ரிசானாவின் குடும்பத்தினருக்கென ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கான நடவடிக் கைகளை இலங்கை அரசின் நிதியுதவியுடன் மூதூர் பிரதேச இராணுவத்தினர் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்திவாரத்தை தோண்டும் பணிகளை ஆரம்பித்த படையினரிடம் ரிசானாவின் தாயார் ரிசானா வாழ்ந்த குடிசை வீட்டை உடைக்காமல் கட்டுமாணப் பணிகளை முன்னெடுக் குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவ்வாறே முன்னெடுக்கப்படுகின்றது.

## தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை – கிறேஸ் ஹோமில்

'கிறேஸ் கெயார் சென்ரர்' தங்களது கிறேஸ் இல்ல மாணவர்களின் முன்னேற்றம் கருதி 'தலைமைத்தும்' பயிற்சிப பட்டறை ஒன்றை நடாத்தவுள்ளது. இல்ல ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.ந.செல்வஜோதி அவர்களின் ஏற்பாட்டிலும் மேற்பார்வையிலும் பட்டறை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விரிவுரைகளாக தலைமைத்துவ ஆளுமை விருத்தி, நேர முகாமைத்துவம், அவதானம், தியானம், வாய்த்துர்நாற்றம், கோலம், இறை நம்பிக்கை, சமயமும் வாழ்க்கையும் போன்ற வாழ்க்கைக்கு உபயோகமான தலைப்புக்களில் குறித்த துறைகளின் நுட்ப வல்லுனர்களால் நிகழ்த்தப் படவுள்ளது.

31.01.2013 தொடக்கம் 03.02.2013வரை மூன்று நாட்கள் இப் பயிற்சிப் பட்டறை நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "25 வயதுக்குப் பின்னரே சவூதிக்கு"

வெளிநாட்டு வேலைவாய்பிற்காகப் பயணிக்கும் வீட்டுப் பணிப்பெண்களைப் பாதுகாக்க புதிய வயதெல்லை-களையும், பயிற்சி நிபந்தனைகளையும் அமைச்சரவை முன்மொழிந்துள்ளது.

அதன்படி சவூதிக்குப் பணிப்-பெண்ணாகச் செல்லும் பெண்களின் ஆகக் குறைந்த வயதெல்லை 25 ஆகவும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கு 23 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் சிங்கப்பூர், மலேசியா, சைப்பிரஸ், ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கான வயதெல்லை 21 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு செல்பவர்கள் அனைவரும் ஆகக்குறைந்தது 21 நாட்கள் "வீட்டுப் பணிப்பெண்" வதிவிடப் பயிற்சியைப் பெற்றிருப்பதுடன் தேசிய தொழில் வாய்ப்பு தகமையின் 3ம் படிநிலைச் சான்றிதழையும் பெற்றிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக நிதியின் 100 மில்லியன் ரூபாய்களை சமுர்த்தி வங்கியில் வைப்பிலிட்டு அந் நிதியூடாக வெளிநாட்டு வேலைவாய்பில் உள்ளவர்களுக்கு வீட்டுக்கடன் வசதியை வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இக்கடன் 50,000 ரூபா தொடக்கம் 300,000 வரை சமுர்த்தி வங்கியூடாகவும், கிராமிய அபிவிருத்தி வங்கியூடாக 250,000 வரையும் வழங்கப்பட வேண்டும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன்மொழிவினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் கூட்டாக முன்மொழிந்துள்ளார்

## புகையிலைப் பாவனையில் மட்டக்களப்பு முதலிடம் !

**– அமைச்சர் டலஸ்–**

உலக சுகாதார நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டமே புகைப்பொருள் பாவனையில் முதலிடத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது என அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார். மதுப் பாவனையில் இம் மாவட்டம் மூன்றாவது இடத்திலுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று கவியரங்கம்

கிண்ணியா கலையிலக்கிய மன்றத்தால் தேசிய மீலாத் விழாவை முன்னிட்டான கவியரங்கம் ஒன்று கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று நடைபெறுகின்றது.

"முழுமதி முஹம்மது நபி" என்ற தலைப்பில் இடம்பெறும் இக்கவியரங்க நிகழ்வில் கிழக்கு மாகாண கலாசார திணைக்கள உத்தியோகத்தர் திரு. க.அன்பழகன், கிண்ணியா பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் மற்றும் பல கலை இலக்கிய ஆர்வலர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

## கிழக்கின் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கை...

இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் கிழக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சருடன் கலந்துரையாடலை நடாத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணஅமைச்சர் நசீர் அகமட்டுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது பல திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன அவற்றுள் சுற்றுலாத்துறை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. விழிப்புணர்வுகளை மேற்கொண்டால் மட்டுமே சுற்றுலாத் துறை வளர்ச்சியடையும் வாய்ப்பு பெருமளவில் காணப்படுவது இக் கலந்துரையாடலில் முக்கியமாக பேசப்பட்டுள்ளது.

இவ்வாறு விழிப்புணர்வு ஊட்டப்படும் போது இந்த மாகாணத்தைச் சேர்ந்த மக்களே சுற்றுலாப் பயணிகளை வரவேற்று அவர்களை நிம்மதியாக தங்களது நாட்களை கழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்பதுடன் இவ்வாறான உபசரிப்பால் அவர்கள் திரும்பவும் கிழக்கிற்கு வர விரும்புவர்கள் என்றும் வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் கருத்துரைத்தனர்.

## இலவச கண் பரிசோதனை முகாம் – திருமலை ரோட்டறி கண்டி ரோட்டறியுடன் இணைந்து நடாத்தியது

வரோதய நகர் மற்றும் தென்னமரவாடி மக்களுக்கான கண் பரிசோதனை முகாமொன்று ரோட்டறி கழகத்தின் திருகோணமலை மற்றும் கண்டி மாவட்ட பிரிவுகளால் நடாத்தப்பட்டுள்ளது.

கடந்த 20.01.2012ல் நடைபெற்ற இம் முகாமில் கண் பரிசோதனைக்கான நிபுணர்கள் கண்டியிலிருந்து வருகை தந்திருந்தனர். சுமார் முன்னூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுள் தேவையான மக்களுக்கு இலவச கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

## அதிரடியில் அதிகாரிகள் சோதனைகள் வலுக்கின்றன

கடந்த மூன்று வாரங்களுக்குள் திருக்கோணமலை நகரில் மாத்திரம் டெங்கு நோயின் அறிகுறியுடன் பன்னிரெண்டுக்கும் மேற்பட்டோர் இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பெருங்குழுக்களாகப் பிரிந்து திருமலை நகரப் பிரதேசத்தைக் கடந்த மூன்று தினங்களுக்கு மேலாக கடும் சோதனையிட்டு வருகின்றமையை அவதானிக்க முடிந்தது.

மூதூர், கந்தளாய், சேருவில, திருக்கோணமலை ஆகிய அனைத்துப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனைவரும் இணைந்து இப் பாரிய சோதனை நடவடிக்கைகளை வீடு வீடாக மேற்கொண்டு வருகின்ற-தாகவும்,



வெகு விரைவில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் நகரப் பகுதியில் முற்றாக அழிக்கப்படும் என்றும் எனினும் பொதுமக்கள் டெங்கு தொடர்பாக கடும் விளிப்புணர்வுடன் செயற்படுமாறும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் மலைமுரசுக்கு பிரத்தியேகமாக தெரிவித்தார்.






தன்னடக்கம் சிலவேளை சில முக்கியமான விடயங்களை வெளிக்கொண்டு வராமல் போய் விடுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது போல.

திரியாய் குன்றில் பயணித்துக் கொண்டு இருக்கும் நாம், இக் கல்வெட்டை யார் கண்டு பிடித்தார் என்ற தகவல் இல்லாமலே சென்று கொண்டு இருந்தோம். ஆனால் அக் கண்டு-பிடிப்பாளன் நம் அருகே அமைதியாக இருந்திருக்கிறார். சென்ற வாரம் இயற்கை எய்திய திரு.நா.தம்பிராசா அவர்களே இக் கல்வெட்டை வெளிக்கொண்டு வந்திருக்கிறார். 1970ம் ஆண்டு காலப்பகுதியில் அவருக்கும் இக் கல்வெட்டுகளை ஆராய்ச்சி செய்ததாக கூறும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இடையிலே தொடர்பாடப்பட்ட கடிதங்களை தற்செயலாக வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது தவிர வரலாற்று ஆய்வாளர்களிடையே இருந்த முறுகலையும் சந்தேகங்களையும் பல்கலைக்கழகம் வரை தீர்த்து வைத்த இலங்கையின் வரலாற்று ஆய்வாளர்கள் என்று சொல்லி கொள்ளுபவர்களுக்கு ஆதாரங்களை கொடுத்த, ஆறாம் தரம் மட்டுமே படித்த வரலாற்று ஆய்வாளன் ஏன் கடைசி வரை தன்னை சமூகத்திடையே வரலாற்று ஆய்வாளன் என்று காட்டிக் கொள்ளவில்லை என்று புரியவில்லை.

அதைவிட அவர் தேடிக்-கொடுத்த திரியாய் ஆதாரங்கள் சிலருடைய உயர் பட்டப்படிப்புக்கு மட்டுமே பயன்பட்டு போனது மட்டுமல்லாது திரியாய் இப்போது பௌத்த தலம் ஆகிப்போனது.

முடிவு

கி.பி ஆறாம் நூற்றாண்டுக்கு பின்னர் பல்லவ ஆட்சியின் கீழும் ஆக்கிரமிப்பின் கீழும் இருந்த நாடுகளில் பல்லவர்களின் நிர்வாக முறை பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதிலும் தாங்கள் என்ன செய்தாலும் அதனை ஆவணப்படுத்துவதில் கில்லாடிகள் அவர்கள்.


இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற உலகமே வியக்கும் அளவுக்கு வியாபாரத்திற்கு என ஆயுதம் தாங்கிய படையை கையில்


திருஞானசம்பந்தர்

வைத்துக்கொண்டு தங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்ட இவர்கள் திராவிடர்(இலங்கைக்குடிகள்) ஆரிய,திராவிட ,பல்லவ கலப்பு இனங்களை(சிங்களவர் என்று பிற்பட்ட காலத்தில் உருவாகிய இனம்) சமாளித்து அல்லது எதோ ஒரு தந்திரோபாயம் மூலம் இலங்கையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதிலும் பருவக்காற்றினால் ஈழத்தின் கிழக்குப் பகுதியாகிய, ஆசிய நாடுகளுடன் தொடர்புடையதான திருகோணமலை அவர்களுடைய முக்கிய மையமாக இருந்துள்ளது.

கிழக்கு இலங்கையில் பரவலாக மட்டக்களப்பு, வெல்லாவெளி, மூதூர் வரை பல்லவ வியாபார ஆதாரங்கள் கிடைத்த போதும் இன்றுவரை திரியாய்தான் மிகப்பெரிய பல்லவர்களுடைய வியாபார மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தங்களுடைய கட்டிட பாணியில் அமைக்க பெற்ற வியாபார மையத்தில் தங்களுடைய வியாபாரிகள் அவர்களுடைய நம்பிக்கைகளை வழிபட பௌத்த, சமண, சைவ வழிபாட்டு தலங்களை அமைத்திருந்தனர். அதிலும் இங்கு கட்டாயம் சைவ ஆலயம் இருந்திருக்க வேண்டும். ஏன் என்றால் அக் காலப்பகுதியில் பல்லவ நாட்டில் சைவ சமயம் எழுச்சி பெற்றுக் கொண்டு இருந்தது. அதிலும் பல்லவ நாட்டில் இருந்து கொண்டு திருகோணமலையின் சைவத்தை புகழ்பாடும் அளவுக்கு சைவத்தின் வீரியம் இங்கு அதிகமாகவே காணப்பட்டது.

திருநாவுக்கரசர், சம்பந்தர் ஆகிய சைவசமயம் சார்ந்த நபர்களால் இன்றுவரை உருவாக்க காலம்



அறியப்படாத திருக்கோணேஸ்வர ஆலயம் மீது பாடல்கள் பாடப்பெற்றுள்ளது, என்றால் கோணேஸ்வரத்தின் அருகில் இருக்கும் திரியாயில் நிச்சயம் பல்லவர்களால் நிச்சயம் சைவ தலம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழன் பௌத்தனாகவும் சமணனாகவும் சைவனாகவும் வாழ்ந்து விட்டு இன்று தன் சொத்துக்களை தன் பிரிவினையால் யாரோ ஒருவருக்கு கொடுத்து விட்டு இன்னும் அதே பல்லவியை பாடுகிறான்.

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றைப் பேசுதல்

வி. மைக்கல் கொலின்.

மலைமுரசு 30.12.2012 இதழில் திரு. தில்லைநாதன் பவித்ரன் எழுதிய '126வது ஆண்டிலாவது கைகூடுமா கலை இலக்கிய வாதிகளின் ஒற்றுமை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை தொடர்பாக விடுபட்டதும் தெளிவுபடுத்த வேண்டியதுமான சில தகவல்களை பதிவு செய்ய வேண்டிய தேவையின் அடிப்படையிலேயே இக்குறிப்பினை வரைகின்றேன்.

திருக்கோணமலையின் கலை இலக்கியம் இவ்வாண்டு முடிவோடு தனது 125வது வரலாற்றாண்டை கடக்கிறது. சமூக, அரசியல், கேந்திர சமய ரீதியாக பழமை பேணும் இம்மண்ணின் கலை இலக்கிய வரலாற்றை 1887ம் ஆண்டு தட்ஷிண கைலாய புராணத்தோடு தொடங்குவதாக ஆரம்பிக்கும் இக்கட்டுரையின் குறிப்பு தொடர்பாக திருகோணமலையின் பலநூற்றாண்டு பழமை வாய்ந்த அதன் இலக்கிய பாரம்பரியம் தொடர்பாக பல சந்தேகங்களும், வினாக்களும் இருந்தாலும் (இது தொடர்பாக பிரிதொரு கட்டுரையில் எழுதலாம் என நினைக்கின்றேன்) இக்கட்டுரை சொல்ல வந்த விடயங்கள் தொடர்பாக மட்டுமே எனது பார்வையை விசாலிக்கலாம் என நினைக்கின்றேன்.

"இன்றைய திருமலையின் இலக்கியப் போக்கில் காணத்தக்க மாபெரும் குறைபாடாக கருதக்கூடியது, இலக்கியத்திற்கு என்று தனியான ஒரு பொது அமைப்போ அல்லது நிறுவனமோ இல்லாதிருப்பது. இக்குறைபாட்டின் காரணமாக திருமலையின் இலக்கியம் தனது காத்திரத்தன்மையை இழந்து வருகிறது. நெடுங்கால பழமை கொண்ட இவ்விலக்கிய நகரிலே பொதுமைப்படுத்தப்பட்ட அனைத்து கலை இலக்கிய சமூக ஆர்வலர்களை உள்ளீர்ப்புச் செய்ததான ஒரு மா சபையின் கேள்வி நீண்ட காலமாகவே நிரம்பல் செய்யப்படாது உள்ளது"

எனக் குறிப்பிடும் பவித்திரன் 'திருமலையின் இலக்கியப் போக்கில் 1969 - 1970 காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சங்கப்பலகையுடன் ஆரம்பமாகும் நிறுவன ரீதியான இலக்கிய செயற்பாடுகள் முன்னோடிகள், ஈழத்து இலக்கியச் சோலை, மனித வள மேம்பாட்டு நிறுவனம், என முதற்கட்ட அமைப்புக்களுக்குப் பின் இன்றைய நிலையில் திருகோணமலை கலை இலக்கிய ஒன்றியம், நீங்களும் எழுதலாம், இளங்கோ கழகம், பகிர்வுகள், கலை கலாசார அபிவிருத்தி அமையம், அறிவோர் அரங்கம் என பட்டியல் இடும் இவர் ஏனோ தெரியவில்லை 1985 - 1998 காலப்பகுதியில் திருகோணமலையின் கலை இலக்கிய விடியலுக்கு பூபாளம் பாடி பல கலை இலக்கிய் செயற்பாடுகளை முன்னெடுத்து சரித்திரம் படைத்த 'தாகம் கலை இலக்கிய வட்டம்' தொடர்பாகவும், திருகோணமலை கலை வட்டம், கீழைத்தென்றல் கலா மன்றம், வள்ளுவர் சபை, தொடர்பாக மறந்து போனது சில சந்தேகங்களை எழுப்புகிறது.

1969 - 70 களிலும் இல்லை (அதற்கு முன்னர் (1950 - 1953) திருவள்ளுவர் கழகம் ) 2010க்கு பின்னர் பவித்திரன் குறிப்பிடும் பல அமைப்புக்கள் அமைப்பு ரீதியான இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எதுவித பிரச்சினையுமில்லை. ஆனால் எமது வடகிழக்கு மண்ணில் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த 1985 - 1998 காலப்பகுதி என்பது மிகவும் மோசமான காலகட்டமாகும். 1985ல் வெளிவரத் தொடங்கிய 'தாகம்' தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்தது. அதன் முதல் ஆண்டுமலர் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 1995ல் அதன் பத்தாவது ஆண்டு மலர் மட்டக்களப்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இரண்டாவது ஆண்டுமலர் வெளியீட்டில் இருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டுமலரும் திருகோணமலையில் பல வெளியீட்டு விழாக்களை நடாத்தியது. திருகோணமலையில் இருந்து தொடர்ச்சியாக ஒரு இலக்கிய இதழ் பத்து வருடங்கள் வெளிவந்தது என்றால் அது தாகமே.



அதே வேளை தாகம் கலை இலக்கிய வட்டம் என்ற அமைப்பின் ஊடாக இன்று அரசு நிறுவனங்களும், அரசு சாரா நிறுவனங்களும், இலக்கிய அமைப்புக்களும் நடாத்தும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்விற்கு முன்னோடியாக 1991ல் திருகோணமலையில் மாபெரும் கலை இலக்கிய விழாவினை நடாத்தி திருகோணமலையின் மூத்த எழுத்தாளர்கள் நால்வரை கௌரவித்த பெருமை ஈழத்திலேயே முதல் முதலாக தாகம் அமைப்பால் நடாத்தப்பட்ட கலைஞர் கௌரவிப்பு நிகழ்வாகும். இவை தொடர்பாக 'திருகோணமலை கலை இலக்கிய வரலாறு' என்ற நூலில் திருமலை நவம் அவர்கள் பதிவு செய்துள்ளதை அப்படியே தருகின்றேன். (பக்கம் - 233)

தாகம் - (1985 - 1998) - திருகோணமலையின் இளைஞர் வி. மைக்கல் கொலின் அவர்களை ஆசிரியராக கொண்டு 1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதன் முதலாவது இதழ் வெளி வந்துள்ளது. 'இலக்கியம் வளர்ப்போம் இலட்சியத்தோடு' என்ற கோஷத்தினை முன்வைத்து இருமாத இதழாக ரோணியோ பதிப்பாக இதனை அவர் வெளியிட்டு வந்துள்ளார்.

தாகத்தின் ஆறாவது இதழ் முதலாவது ஆண்டு மலராக கொழும்பில் அச்சு வடிவில் வெளியிடப்பட்டது. தாகத்தின் வெளியீடாக 'நிர்வாணம்' எனும் புதுக் கவிதைத் தொகுதி வெளிவந்தது. இதில் ஈழத்தின் பல புதுக்கவிஞர்கள் பங்களிப்புச் செய்திருந்தனர்.

தாகத்தின் இரண்டாவது ஆண்டுமலர் திருமலை நகராட்சி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 1987ம் ஆண்டுக்குப் பின் தாகத்தின் வரவில் ஓர் புதுப்பொலிவு மிளிரத் தொடங்கியது. தாகம் புரட்சிகர முற்போக்கு இதழாக பல காத்திரமான அரசியல் விமர்சனங்களையும், படைப்புக்களையும் தாங்கி வரத் தொடங்கியது.

தாகம் தனக்கென ஓர் இலக்கிய வட்டத்தை 1990ம் ஆண்டு நிறுவி மாபெரும் கலை இலக்கிய விழாவினை நடாத்தி இரு மலர்களை வெளியிட்டது. இப்பெரு விழாவில் திருமலையின் மூத்த எழுத்தாளர்களான வ.ஆ. இராசரத்தினம், திரு. க. அருள் சுப்பிரமணியம், கவிஞர் தாமரைத் தீவான், திருமலை நவம் ஆகியோரை தாகம் கௌரவித்து.

1990ம் ஆண்டளவில் தாகம், வெளியீட்டுப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து பின்வரும் ஐந்து நூல்களை வெளியிட்டு வைத்துள்ளது.

1. கிராமத்து மண்கள் சிவக்கின்றன (சிறுகதைத் தொகுதி) சித்ராநாகநாதன் (வடகிழக்கு மாகாண சாகித்திய விருது) 2. ராத்தி (புதுக்கவிதைத் தொகுதி) இப்னு அஸ்ஸமத். 3. நிர்வாணம் (சிறுகதைத் தொகுதி) உடுவை எஸ். தில்லை நடராஜா (தமிழ் நாடு லில்லி தேவசிகாமணி பரிசு பெற்றது. 4. கீறல்கள் (மரபுக் கவிதைத் தொகுதி) கவிஞர் தாமரைத் தீவான் (வடகிழக்கு மாகாண சாகித்திய விருது) 5. என் பிரிய ராஜகுமாரிக்கு (புதுக்கவிதைத் தொகுதி) கவிஞர் வி. மைக்கல் கொலின்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

தம்பலகாம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 1

## வரலாற்று நாவல்

தம்பலகாமம் கோட்டை சில நாட்களின் பின், அப்போதுதான் மீள உயிர் பெற்றதுபோல் செயற்படத் தொடங்கியிருந்தது. வழமையான முறைக் காவல்கள் புதுவேகத்துடன் ஆரம்பமாகியிருந்தன.

போரிலே தளபதி காயப்பட்டுப் படுக்கையில் கிடந்த நாள் முதற்கொண்டு சோர்வாகிப் போனது கோட்டை அலுவல்கள், தொடர்ந்து அரசர் கலிங்கத்து (மாகன்)விஜயவாகு, தளபதியை காயங்கள் சுகமாகி உடம்பு தேறுதலாகி வரும்வரை ஓய்வில் அனுப்பத் தீர்மானித்த செய்தி கோட்டைக்குத் தெரியப்படுத்தப்பட்ட போது, ஒரு ஸ்தம்பித நிலையையே கோட்டை கண்டது.

தளபதி கோட்டையை விட்டு வெளியேறிய நாளே அது சோகம் என்பதை முதலில் கண்ட நாளாக இருக்கவேண்டும். கண்கலங்காத வீரர்களில்லை. சமையல்கட்டு உதவியாளர் முதல் உபதளபதிகள் வரை அழுத கண்களுடன், கனத்த இதயத்துடன் அவரை மீண்டும் வரவேண்டும் என்ற அன்புக் கட்டளையுடன் அனுப்பிவைத்தனர். அவரும் அந்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டாலும் வருவேனா? என்ற சிந்தனையுடனேயே பிரிந்து சென்றார். அவரைப் பொறுத்தவரை, அவர் தோளில் அரசர் சுமத்திய பணியை திருப்தியாகவே இதுவரை பூர்த்தி செய்திருக்கிறார். எதிரிகளின் அச்சுறுத்தல் திருகோணமலைப் பிராந்தியத்துக்கு ஒரு சகாப்தம் வரையிலாவது தலை தூக்காதபடிக்கு அவர் செய்து இருக்கிறார். அந்த வகையில் அரசருக்கு ஒரு நிம்மதியைத் தந்ததில் அவருக்குப் பெரும் ஆறுதல். ஓய்வை அவர் நாடியதில்லை. ஆனாலும் மன்னர் அவரை விடுவதாயில்லை. அடுத்த தளபதியாக யாரை நியமிக்கலாம் என்று அவரிடமே ஆலோசனை கேட்டபோதுதான் மறுத்தாலும் மன்னரே நேரில் வந்து தூக்கிக்கொண்டு போனாலும்போவார் போலிருக்கிறது என்று தனக்குள் எண்ணி, மன்னர் தன்மேல் கொண்டுள்ள பாசம் குறித்துப் பெருமிதமும் கொண்டார்.

தனக்குப் பின்னர் கோட்டைக்குரிய தளபதியை அவர் மன்னரிடம் சிபாரிசு செய்து செய்தி அனுப்பினார். அவரைப் பொறுத்த வரை அவன் ஒரு வீரன். சிறு வயதுக்குள்ளேயே களம் பல கண்ட அனுபவசாலி, மன்னருக்கும் உறவுமுறை. தனக்குப்பின்னர் அந்தப் பிராந்தியமும், அமைந்துள்ள கோட்டைகளும் பாதுகாக்கப்படுவதில் எந்தக் குறைபாடும் வராது என்பதில் அவருக்கு உறுதியிருந்தது. இதனாலேயே அவருக்குத் தான் திரும்பி வரவேண்டிய தேவை எழாது என்ற நிலைப்பாடும். வருவேனா? என்ற கேள்வியும் ஏற்பட்டது.

தன் சொந்த மண்ணாக எண்ணிய தம்பலகாமம் பசுஞ்சோலைக் கிராமத்தையும், தம் வீரத்தால் உரமூட்டிய அந்த கோட்டையையும் விட்டு அவர் கனத்த இதயத்தோடுதான் நீங்கினார். அதற்குப் பிறகு சோர்வு, இழப்பு, எதிர்பார்ப்பு, இப்படிப் பல உணர்வுப் போராட்டங்கள் மனதில் எழ, எந்திரம் போன்று கடமை பண்ணிய போர்வீரர்கள் இப்போது புத்தூக்கம் பெற்று செயற்படத் தொடங்கியிருந்தார்கள்.

புதிய தளபதி வந்தார். ஒரு இளம் தளபதியாக இருந்தார். எளிமையும், கண்டிப்பும், உழைப்பும் அவனில் தெரிந்தது. கோட்டைப் பாதுகாப்பில் எடுத்த எடுப்பிலே செய்த சிறு சிறு மாற்றங்களைக் கண்டு ஆரம்பத்தில் அலட்டிக் கொள்ளாதவர்கள் நாளாக அதனால் கோட்டை பலம் பெற்றது போன்ற உணர்வைப் பெறவே புதியவனில் புது அக்கறை கொள்ளத் தலைப்பட்டனர்.

கோட்டைக்குள் முறைக்காவல் உசாராக நடந்தது. காவல் பணி மாறும்போது எழும் கட்டளை ஒலிகளால் கோட்டை உயிர் கொண்டது. நாளாந்தப்பணிகள் உசாராக நடக்கத்தொடங்கின. உச்சிமீது நின்று நர்த்தனமாடிக் களைத்துப்போன சூரியன் ஓய்வெடுக்கவென்று மேற்கு நோக்கி நகரத்தொடங்கி சுமார் நான்கரை நாளிகையாகியிருந்தது. வங்கப்பெருங்கடலில் தவழ்ந்து சூட்டைத் தணித்துக்கொண்ட கொண்டல் காற்று தம்பலகாமத்தின் வடகிழக்கு மூலையால் ஊருக்குள் புகுந்து குளிர்மை பரவச்செய்துகொண்டு இருந்தது.

மாலைப்பொழுதாவது குறித்து மகிழ்ந்தவைபோல பறவை இனங்கள் குடில்தேடி கிளம்பிக் கொண்டிருந்தன. அவைகளின் இனிய நாதத்தைக் கூட தாண்டி ஒரு இளம் குரல் குயிலோடு போட்டி போடக்கூடிய இனிமையோடு பாடும் குரல் கேட்டது. அந்த அந்திசாயும் வேளையில் தம்பலகாமம் தெற்கில் ஊருக்கு அருகாக சலசலத்துப் பாயும் குடமுருட்டியாற்றின் வெண்மணல் பரப்பில் ஆற்றோரம் அமர்ந்திருந்து ஒரு யுவதி பாடிக்கொண்டிருந்தாள்.

அவள் கைகளிரண்டையும் பின்னால் ஊன்றியிருந்தாள். கண்கள் மூடியிருந்தன. கால்கள் இரண்டும் ஆற்று நீரால் கணுக்கால் வரை நீராட்டப்பட்டுக்கொண்டிருந்தன. நிமிர்ந்திருந்த நெஞ்சத்து எழில்களின் திமிர்ப்பு அவளை சுமார் பதினேழு பதினெட்டு வயதினளாகக் காட்டியது. தன்னை மறந்து தான் மீட்டும் இராகம் சரிதானா என்று தானே எடைபோட்டுப் பார்ப்பவளாக அவள் தெரிந்தாள். அவளது இராக ஆலாபனையைக் கேட்டு எப்போதும்போல் அப்போதும் களிகொண்ட குடமுருட்டி ஆறு களுக் களுக் கென்று தனது பாராட்டைச் சொல்லி ஓடிக்கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## சிரியாவின் நதியின் கரையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களின் சடலங்கள்

உள்நாட்டுப் போரில் சேதமடைந்துள்ள சிரியாவின் நதிக்கரையொன்றில் ஒற்றைச் சூட்டுக் காயங்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவர்களது கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருப்பதுடன் தலையில் அல்லது கழுத்தில் ஒற்றைச் சூடு நிகழ்த்தப்பட்டிருப்பதால் பிரிவினைப் போராளிகள் அல்லது சிரிய அரசுப் படைகளால் கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்றே நம்ப வேண்டியுள்ளது.

ஆனால் இவ்வாறு அந்த நதிப் படுக்கையில் இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதை பிரிவினைப் போராளிகளே வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளனர்.

பிரிவினைவாதிகளால் முன்னரே பஸ்டன் அல் ஹசார் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டவர்கள் இவர்கள் என சிரிய அரசு தெரிவித்துள்ளது. அதனால் அவர்கள் பிரிவினை வாதிகளாலேயே கொல்லப் பட்டிருக்க வேண்டும் என அரசின் அதிகாரி-யொருவர் தெரிவித்தார்.

சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட குவேய்ஸ் நதி பஸ்டன் அல் ஹசார் பிரதேசத்தையும் அன்சாரி பிரதேசத்தையும் பிரிக்கும் எல்லையாகும்.

## "ஆறாவது சந்தேக நபர் சிறுவனே" என்பு மச்சைப் பரிசோதனையில் தெளிவு

டெல்லியில் பிரபல்யமான பெண் வன்புணர்வுக் கொலை வழக்கின் ஆறாவது சந்தேக நபர் பராய மடையாதவர் என்பதால் அவரை சிறுவர் நன்னடத்தைக் குற்றச்சாட்டை விசாரிக்கும் நீதிமன்றில் பாரப்படுத்த உள்ளதாக டெல்லியின் காவல்துறை தெரிவித்துள்ளது.

குற்றத்தின் பின் கைது செய்யப்பட்ட அறுவரில் ஆறாவது சந்தேகநபரின் ஆவணங்களிலிருந்து அவர் பராயமடையாதவர் எனத் தெரிய வந்த போதும் அதனை உண்மையென நிரூபிக்க என்பு மச்சைப் பரிசோதனை நடாத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்கொரிய வானோடம் விண்ணில் பாய்ந்தது தனது 3வது முயற்சியில் வெற்றி

தென் கொரியா தனது வானோட மொன்றை பால்வெளியில் நிலைப் படுத்தியுள்ளது.

தனது நாட்டுக்குச் சொந்தமான வானோடமொன்றை பால்வெளியில் நிறுத்துவதற்கு முறையே 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் தென் கொரியா முயற்சிகளை மேற்கொண்டது எனினும் அம் முயற்சிகள் கைகூடவில்லை.

சனவரி 30, 2013ல் ஏவப்பட்ட "நரோ" எனப் பெயரிடப்பட்ட விண்கலமானது வெற்றிகரமாகப் பால்வீதியில் நிலைப்படுத்தப்பட்டமை தென்கொரிய வானோடக் கனவை நனவாக்கியுள்ளது.

இரஸ்யாவுடன் இணைந்து வானில் பாய்ச்சப்பட்ட இவ் விண்ணோடம் 140 தொன் கனமுடையது.

## – தொன்று மருந்தேற்றாளர் மீது தாக்குதல் – பாதுகாப்புப் படையினன் பலி

பாகிஸ்தானில் போலியோ தொற்று மருந்தேற்றாளர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் அம் மருந்தேற்றாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்த படைவீரன் ஒருவர் மரணமாகியுள்ளார்.

இத் தாக்குதலுக்கு எந்த ஆயுதக் குழுவும் உரிமை கோராதுள்ள நிலையில் தலிபான்கள் ஏற்கனவே போலியோ தொற்று மருந்தேற்றாளர்களைக் கொல்லப் போவதாக விடுத்துள்ள எச்சரிக்கையை பாகிஸ்தானிய காவல்த்துறை மேற்கோள்காட்டியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் மருந்தேற்றாளர்கள் எண்மர் கராச்சி நகரில் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு செயற்படும் மருந்தேற்றாளர்கள் அமெரிக்க உளவுத்துறையைச் சேர்ந்தவர்கள் என பாகிஸ்தானிய ஆயுததாரிகள் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்.

பாகிஸ்தான், நைஜீரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிலுமே போலியோ நோய் தற்போதும் ஆபத்தான நோய்களுள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சுவாபி மாகாணத்தில் 538 மருந்தேற்றும் அணிகள் செயற்படுவதாகவும் தலா ஒரு படைவீரன் அவற்றிற்குக் காவலளிப்பதாகவும் தெரியவருகிறது.

## நாய் தூக்கிச் சென்றது நாலு லட்சம் ரூபாவை இந்தியாவின் பீகார் மாநிலத்தில் குற்றப்பதிவு

தெரு நாயொன்று தனது பணப் பையைத் திருடிச் சென்று விட்டதாக பீகாரிலுள்ள வர்த்தகர் ஒருவர் காவல்த்துறையில் குற்றப்பதிவைச் செய்துள்ளார்.

தனது படுக்கையுடன் வைத்திருந்த பணப்பொதியை தெருவிலிருந்து வீட்டிற்குள் புகுந்த நாய் மிக வேகமாகத் தூக்கிச் சென்றதாக அவர் தெரிவித்திருந்தார். அவ் வேளையில் அவர் கைகளைக் கழுவச் சென்றுள்ளார்.

குற்றப்பதிவைத் தொடர்ந்து அவரது வீட்டிற்கு அருகிலுள்ள தெருவில் தேடுதல் நடாத்திய காவல்துறை 140,000 இந்திய ரூபாய்களை மீட்டுள்ளது.

விடயம் வெளியானதைத் தொடர்ந்து தெருவெங்கும் மக்கள் தொலைந்த பணப்பையைத் தேடி வருகின்றனர். குற்ற வழக்கினை நாயின் மீது சுமத்துவது என்பது முடியாத காரியம் என காவல்த் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 04

பிரதீபா

1. மலை நாட்டுப் பகுதியில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ள பிராணி எது?
   1. யானை 2. அட்டை 3. காட்டுப்பன்றி

2. சமாதானத்தின் சின்னமாக கருதப்படும் பிராணி எது?
   1. மணிப்புறா 2. மாடப்புறா 3. வெள்ளைப்புறா

3. இலங்கையில் மட்டும் வாழும் இலங்கைக்குரிய பிராணி எது?
   1. பெலிக்கன் 2. ஆட்காட்டி குருவி 3. சருகுமான்

4. இலங்கையில் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?
   1. பின்னவல 2. குமண 3. வில்பத்து

5. இளமைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பிராணி எது?
   1. வௌவால் 2. ஆமை 3. முதலை

6. இரவு வேளையில் திரியும் பறவை எது?
   1. மரங்கொத்தி 2. ஆந்தை 3. மீன் கொத்தி

7. அணில் மரத்துக்கு மரம் தாவும் போது, உடலின் சமநிலையை பேணுவது?
   1. மீசை 2. கால்கள் 3. வால்

8. ஆடையில் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள் எது?
   1. மண்ணெண்ணெய் 2. வினாகிரி 3. எலுமிச்சைப்புளி

9. பின்வரும் பொருட்களிடையே வெங்களப் பாத்திரங்களை துப்பரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமானது எது?
   1. தேயிலைச்சாயம் 2. சுட்ட உமி 3. பழப்புளி

10. ஒருவரின் ஆடையை இன்னொருவர் அணியும் போது ஏற்படக்கூடிய தோல் நோய் எது?
    1. தேமல் 2. தடிமல் 3. எக்சியா

11. நீங்கள் அன்றாடம் பாவிக்கும் பொருட்களில், எவை மண்ணினுள் புதைக்கும் போது, பிரிகை அடைவதில்லை?
    1. இரும்பு, பொலித்தீன் 2. பொலித்தீன், பிளாஸ்ரிக் 3. ரெஜிபோம், கண்ணாடி

12. முகம் பார்க்கும் கண்ணாடியை சுத்தமாக்கப் பயன்படுத்தும் பொருள் எது?
    1. விம்சோப் 2. தேயிலைச் சக்கை 3. பழப்புளி

13. உப்பை போட்டு வைக்க பொருத்தமான பாத்திரம் எது?
    1. கண்ணாடிப் பாத்திரம் 2. அலுமினியப் பாத்திரம் 3. பித்தளைப்பாத்திரம்

14. ஒரு கோழியினதும், ஒரு சேவலினதும் விலை ரூபா 1400 ஆகும். சேவலின் விலை கோழியின் விலையின் 3 மடங்காகும். எனின், சேவலின் விலை யாது?
    1. ரூபா 350 2. ரூபா 1005 3. ரூபா 1050

15. இன்று வெள்ளிக்கிழமை, நாளை மறுநாள் 28 ஆம் திகதி ஆயின், சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?
    1. 20 2. 19 3. 21

**தகவலை வாசித்து விடையளிக்குக.**

வீணா, சுமனா, அமலி, சமகி ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். சமகியை விட 5 புள்ளிகள் கூடுதலாக வீணா பெற்றதுடன், அமலி சுமனாவை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். வீணாவும், அமலியும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

16. ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?
    1. அமலி 2. சமகி 3. சுமனா

17. அமலி பெற்ற புள்ளிகள் 51 எனின், சமகி பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை?
    1. 46 2. 56 3. 59

18. ஒரு வரிசையில் அனுலாவுக்கு முன்னால் 4 பேர் நின்றனர். வரிசையின் கடைசியாக நிற்பவர் முதலாவதாக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்கு திரும்பும் போது, அனுலாவுக்கு முன்னால் இரண்டு பேர் நின்றனர் எனில் வரிசையில் எத்தனை பேர் நின்றனர்?
    1. 6 2. 7 3. 8

19. காலை 10 மணிக்கு குறிக்கப்பட்டிருந்த பேரூந்து 20 நிமிடங்களின் பின்னரே தனது பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலம் 35 நிமிடங்கள் எடுத்தது எனின், பேரூந்து சென்றடைந்த நேரம் யாது?
    1. பி.ப 2.35 2. பி.ப 2.55 3. பி.ப 3.05

20. மதன் தெற்கு நோக்கி நின்று, வலது கைப்புறமாக இரு தடவை செங்கோணமாக திரும்பினான். எனின் தற்போது அவன் நிற்கும் திசை?
    1. மேற்கு 2. வடக்கு 3. கிழக்கு

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிசானா

## "இருபத்தொரு லட்சம் இலங்கையருக்கு கற்றுத் தந்திருக்கும் பாடம்"

மாயன்

உலக அரங்கில் நிரூபிக்கப்படாத குற்றமொன்றுக்காக சிரம் இழந்த இலங்கைப் பணிப்பெண் ரிசானா கற்றுத் தந்துள்ள பாடங்கள் எவையென 65வது சுதந்திர நாளில் சிந்தித்துப் பார்ப்பது சாலச் சிறந்ததாக அமையலாம்.

அதற்கு முதற்படியாக துண்டு துண்டாக வெளியான செய்திகளைத் தொகுத்தெடுக்கும் போதுதான் உண்மையில் ரிசானாவிற்கு நிகழ்ந்தது என்ன? என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

2005ம் ஆண்டு மே மாதம் 04ம் திகதி 23 வயது எனக் குறிக்கப்பட்ட ஆனால் 17 வயதான ரிசானா சவூதி அரேபிய நாட்டுக்கு பணிப் பெண்ணாகப் பயணமானார். அதே மாதம் 22ம் திகதி அவர் நான்கு மாத சிசுவொன்றினை பாலூட்டும்போது கவனமின்றிக் கொன்றதாக குற்றஞ்சுமத்தப்பட்டு கைதாகியிருந்தார். ஜுன் 16, 2007ல் சவூதியின் தவாமி உயர் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனையை தீர்ப்பளித்தது. 2010 ஒக்டோபர் 25ம் திகதி சவூதியின் மீயுயர் நீதிமன்றம் இத் தீர்ப்பை உறுதி செய்தது. 2013 சனவரி 09ம் திகதி அவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

2005ன் மே மாதம் அவர் கைது செய்யப்பட்டது முதல் 2007 ஜுன் மாதம் வரையான இரண்டு வருடங்கள் ரிசானாவிற்கும் இந்த உலகிற்குமான வருடங்கள் இருண்ட வருடங்களாகவே இருந்துள்ளது. ஏனெனில் அவருக்கு முதலாவது நீதிமன்றம் மரண தண்டனையைத் தீர்த்தவுடன் தான் அச்செய்தி ஊடகங்கள் ஊடாக உலகிற்கு தெரியவந்துள்ளது. மிகக் கொடூரமான விடயம் யாதெனில் அப்போதுதான் இலங்கைத் தூதுவராலயத்திற்கும் இவ் விடயம் தெரிய வந்திருந்ததாக ஆசிய மனிதவுரிமைச் சபை (ஆ.ம.ச) குற்றஞ்சாட்டியிருந்தது.

அதற்கும் மூன்று வருடங்கள் கழிந்த பின்னர் தான் இலங்கை அரச தலைவரின் எழுத்து மூல வேண்டுகோள் சவூதி நோக்கி அனுப்பப்பட்டது. அதாவது 2010 ஒக்டோபரில் ரிசானாவிற்கான கருணையை வேண்டி இலங்கையின் சனாதிபரி சவூதியின் மன்னருக்கு எழுத்து மூல வேண்டுகோளைச் சமர்ப்பித்திருந்தார்.

இவ் வேண்டுகோள் சமர்ப்பிக்கப் பட முன்னர் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டிலான் பெரேரா "சவூதி மன்னர் நினைத்தாலும் ரிசானாவைக் காப்பாற்ற முடியாது. கொல்லப்பட்ட குழந்தையின் பெற்றோர் மட்டுமே முடியும்" என தெரிவித்திருந்தார்.

எனினும் சவூதியின் இஸ்லாமியச் சட்டமான வஹாட் சரீஆ சட்டத்தை ஆராய்ந்த ஆ.ம.ச சவூதி அரசினால் வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை மீளப் பெறும் வலுவை ஒன்றில் சவூதி மன்னரோ, அல்லது கொல்லப்பட்ட நேர்க் குடும்பத்திரோ தான் பெற்றுள்ளனர் என்ற விபரத்தை வெளியிட்டது.

இனி ஆ.ம.ச வின் வாதங்களைப் பார்ப்போமாக இருந்தால் ரிசானா கைது செய்யப்பட்டதிலிருந்து அவர் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்ட நாள் வரையான முதலிரண்டு ஆண்டுகளிலும் என்ன நடந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

2005 மே மாதம் 22ம் திகதி கைது செய்யப்பட்டவுடன் அவர் காவல்-துறையினால் கொடுமைப்படுத்தப்-பட்டதாகவும், அச்சுறுத்தப்பட்டதாகவும் அதன் பின்னரே அவர் தான் அக்கொலையைச் செய்ததாக அரபு மொழியில் எழுதப்பட்ட கடிதத்தில் கையெழுத்திட்டதாகவும் ரிசானா பின்னர் தெரிவித்துள்ளார். விசாரணைகளின் போது அவருக்கு வழங்கப்பட்ட மொழி பெயர்பாளர் சவூதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட தமிழர் அல்லாத இந்தியக் கர்நாடக மாநிலத்தவராவார். மேலும் இறந்த குழந்தையின் மீது பிரேத பரிசோதனை நிகழ்த்தப்படவில்லை. அவ்வாறு நிகழ்த்துவதை சவூதியச் சட்டம் தடுத்தாலும் அவ்வாறு நிகழ்த்தியிருந்தால் மட்டுமே மரணமான காரணம் தெளிவாகத் தெரிய வந்திருக்கும். இதனைத் தெளிவுற விளங்கிக் கொள்ள சுவீடனின் பிரபல குழந்தை வைத்திய நிபுணரை ஆ.ம.ச. தொடர்பு கொண்டிருந்த போது அவரது கூற்றானது ''பால் அருந்தும் குழந்தையின் வாயினாலும் மூக்காலும் பால் வெளியே வழிந்திருக்குமாயின் ஒன்றில் அக்குழந்தைக்கு உடலிலுள்ளே குழப்பங்கள் இருந்திருக்க வேண்டும் அல்லது அக்குழந்தை பால் குடிக்க முன்னரேயே இறந்திருக்க வேண்டும்" என தெரிவித்திருந்தார்.

அடுத்து ஆ.ம.ச வின் குற்றச்சாட்டுகள் எவை எனப் பார்க்கும்போது இலங்கை அரசு ஆரம்பம் முதலே மெத்தனப் போக்கினை கொண்டிருந்தது என்பதாக உள்ளது. அத்துடன் ஆ.ம்.ச ஒரு மிகப்பெரும் குற்றச்சாட்டை கூறியது என்னவென்றால் ரிசானாவிற்காக தேர்ச்சி பெற்ற சட்டவாளர் குழுவை நியமிக்கப் போதுமான நிதியுதவியை தாம் கோரிய போது அவ்வாறு செய்ய முடியாது என சனாதிபதியின் சார்பில் தமக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளது.

அடுத்து ஆ.ம.ச வின் முயற்சி எவ்வாறிருந்தது எனப் பார்க்கும் போது ஆ.ம.ச ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்ட சட்டவாளர் அமைப்பை ரிசானாவிற்காக பணிக்கமர்த்தியிருந்தது. இச்சட்டவாளர் அமைப்பு மூன்று முனைகளில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. முதலாவது முனையாக நேரடியாக சவூதி அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இரண்டாவது முனையாக சவூதியிலுள்ள இலங்கை தூதுவராலயம் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த அதேவேளை மூன்றாவது முனையாக கொல்லப்பட்ட குழந்தையின் பெற்றோரை தொடர்புகொள்ள முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. இம் மூன்றாவது முயற்சி அறவே கைகூடவில்லை ஏனெனில் சவூதிய சமூக வழக்கத்தால் குடும்பத்தவரைச் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்கவில்லை இம் மும்முனை முயற்சிகள் ஆரம்பமாகிக் குறுகிய காலத்தினுள்ளேயே ரிசானாவின் சிரச்சேதம் நிறைவேற்றப் பட்டிருந்தது.

இனி இலங்கை அரசின் முயற்சிகளைப் பார்ப்போமானால் 2010ம் ஆண்டில் சனாதிபதியின் முதலாவது வேண்டுகோளைத் தொடர்ந்து 2011 ஆகஸ்டில் அமைச்சர் டிலான் பெரேரா தலைமையிலான குழுவொன்று சவூதி நோக்கிப் [illegible] உரையாடல்களை மேற்கொண்டிருந்தது எனினும் அப் பயணத்தின் முடிவுகள் எதிர்பார்த்த பயன்களை அளிக்கவில்லை. பின்னர் மேல்மாகாண ஆளுனர் அலவி மௌலானாவின் தலைமையில் சென்ற குழுவும் தம்மாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டதென்றும் அவையும் பெரும் பெறுபேற்றைத் தந்திருக்க-வில்லை 17 ஒக்டோபர் 2012ல் குவைத்தில் சவூதியின் இளவரசர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் உடன் பேச்சுக்களை மேற்கொண்டபோது இலங்கை சனாதிபதி ரிசானாவின் விடயத்தைப் பேசியிருந்தார் என அரச செய்தித்தாளும் தெரிவித்திருந்தது. 2013ல் சனவரி 06ம் திகதி தனது இரண்டாவது கடிதத்தை சனாதிபதி அனுப்பியிருந்தார்.

இப்போது நாம் மேற்போந்த விடயங்கள் ஊடாகக் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன? எனப் பார்க்கலாம்.

முதலாவதாக இலங்கையை விட்டு சவூதி நோக்கிச் செல்லும் நாம் அங்கு சென்றவுடன் "நாதியற்ற"-வர்களாகி விடுகின்றோம் என்றே தோன்றுகிறது. அந் நாட்டவரால் நாம் குற்றஞ்சாட்டப்படும் போது எமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் ஏதுக்கள் எவையுமின்றி இருக்கிறோம் என்பதே மிகப்பெரும் பலவீனமாக உள்ளது.

நாம் கைது செய்யப்படதை எமது தூதரகம்-அறியவில்லை. ரிசானா சிரச்சேதம் செய்யப்பட்டதையும் எமது தூதரகம் அறியவில்லை. இவை-யிரண்டுமே இலங்கைத் தூதரகத்தின் கையறு நிலையை வெளிக்-காட்டியுள்ளது.

நாட்டை விட்டுத் தொழில் நிமித்தம் செல்லும் இலங்யைரைப் பாதுகாக்கத் தக்க வகையில் வலுவான உள்நாட்டுச் சட்டங்களும் அவர்களை வெளிநாடுகளில் சட்ட ரீதியாக பாதுகாப்பதற்கான சட்டச் செயற்பாடுகளுக்கு தேவையான பொதுநிதியையும் எமது நாடு இன்னமும் கொண்டிருக்கவில்லை.

அடுத்து இலங்கையன் என்னும் ஒரு தனி மனிதனின் உயிரின் விலை உலக அரங்கிலும் செல்லாக்காசாகப் போவதை நாம் காணலாம். ஏனெனில் தனது நாட்டிலேயே வாழ முடியாத ஆயிரமாயிரம் மூவின மக்கள் வேறு நாடுகளுக்கு ஓடுவதால் எந்த நாட்டிலும் எமது உயிரின் விலை பெறுமதியற்றுத்தான் கிடக்கிறது.

அடுத்து ஆயிரக்கணக்கான இலங்கையர் கடமை புரியும் மத்திய கிழக்கு நாடுகளுடன் எவ்விதமான கைதிகள் பரிமாற்று ஒப்பந்தங்களையும் இலங்கை தற்போதுவரை கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.

உத்தியோகபூர்வத் தகவல்-களின் படி தற்போது சவூதியின் சிரச்சேத வரிசையிலுள்ள மூன்று இலங்கயைரும் செய்த குற்றங்கள் முறையே கிறிஸ்தவ வேத நூல் பைபிளை தனது அறையில் வைத்திருந்தமைக்காக ஒரு ஆணும், இறைதூதர் முஹம்மது அவர்களின் கேலிச்சித்திரமொன்றை "பேஸ்புக்" பக்கத்தில் வைத்திருந்த ஒரு ஆணும், ''பிரித்'' ஆகிய நூல்களை அணிந்திருந்த பெண்ணுமே உள்ளனர். ரிசானாவின் வரிசை நீண்டுகொண்டே போகிறது... அவர்கள் இலங்கையரா என்ற கேள்விக்கான விடையைப் [illegible] அவர்கள் எம்மவரா?

---

## உனை உணர்தல்

மாயன்

இழுத்துப் பூட்டப்பட்ட
கதவின் வெளியே
இருட்டு .. உள்ளே
வெறுமை...

நீ போய்விட்டாய்
இந்த நாள்
முடிந்துவிட்டது...

சுவரில் ஓடும்
பல்லிகளையும்
மெதுவாய் வீசும்
மின் விசிறியையும்
வெறித்துப் பார்த்திருக்கும்
என்னையும் தவிர...

உயிர்ப்புடன் எதுவும்
இவ் வீட்டிலில்லை....

நீ போய்விட்டாய்...

மென்னொளிப் புன்னகை.
முகஞ் சுருக்கும் சினம்
பளீரென அழுகை
பள பளக்கும் கருவிழிகள் -
உதடு
இறுக்கி ஓரிரு முத்தம்

உனது மொழியின் ஒலிகள்
உனது மௌனத்தின் இறுக்கம்
உனது பார்வையின் வெப்பம்
உனது குதியற் சலங்கையொலி

எதுவுமிங்கில்லை...

இந்த நாள்
இப்போதே இறந்தது.. ..

நீ போய்விட்டாய்...

எனினும்
என்னைத் தொடரும்
நிழலின் நிறமாய்
நீ .. ..

## நீ...யார்?

உன்னுள்ளே பார்

வெறிச்சோடிக் கிடக்கும்
மயான வெளியில் -
விருப்பக்
கல்லறைகள்

இன்னும் ஆழப் புகு....

உக்காத எலும்புகள்
பற்கள்- மண்டை
ஓடுகள்....

இன்னும் உள்ளே புகப்
புக...
உன்
ஊன் தின்று உடல்
வளர்த்த புழுக்களைத்
தாண்டி....

வெறும் மண்.....

ஒரு கையில் அள்ளு –
உன்
பெயர் சூட்டு – அது
நீதான் எனக் கொண்டாடு

அக் கணம்
அக்கணமே...
ஆயிரம் பேர் வருவர்
அம் மண் தாமென

எனில்

நீ எங்கே
இருக்கின்றாய்......?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வள்ளம் கவிழ்ந்....

ஆறு வயதான றுக்தியுமே நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளனர்.

இப்படகில் மேலும் மூன்று சிறுவர்களும், மூன்று ஆண்களும் பயணித்திருந்தனர். களப்பில் மட்டியெடுக்கும் நோக்கத்தோடு களப்பிற்கு அருகில் படகைச் செலுத்தியபோது விசையான அலையொன்றால் படகு கவிழ்ந்ததாக எமது நிருபர் தெரிவிக்கின்றார்.

மூன்று ஆண்களுக்கும் உடனடியாக மூன்று குழந்தைகளை மட்டுமே பாதுகாக்க முடிந்துள்ளது. இவ்விரு குழந்தைகளும் நீரில் மூழ்கியுள்ளனர்.

மரணமான குழந்தைகளின் ஜனாஸா நல்லடக்கம் குச்சவெளி முஸ்லிம் மயானத்தில் 27.01.2013ன் மாலையில் நிகழ்ந்துள்ளது. குச்சவெளி காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நாடு முழுவதும்...

பதற்காக நாடு முழுவதும் 20 பல்கலைக்கழகக் கல்லூரிகளைத் திறக்கும் திட்டமொன்றை இளைஞர் விவகார அமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் (யுனிவோடெக்) மாவட்டந்தோறும் இணைக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தினை அனுமதித்த அரசு ரூபா. 1,600 மில்லியன் ரூபாய்களை இத்திட்டத்திற்கான ஆரம்ப நிதி ஒதுக்கீடாக மேற்கொண்டுள்ளது.

ஆரம்பக் கட்ட முன்மொழிவின் படி இளைஞர் விவகார அமைச்சின் கீழியங்கும் பயிற்சி நிறுவனங்களே பல்கலைக் கழகக் கல்லூரிகளாகத் தரம் உயர்த்தப்பட உள்ளன.

இவற்றிற்கும் மேலதிகமாக ஐந்து பல்கலைக் கழகக் கல்லூரிகள் தனியார் துறையின் முதலீட்டுடன் அமைக்கப்படவுள்ளன.

" அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றீடான கற்றல்ப் பொறிமுறையை பட்டக் கல்விவரை வழங்கும். இதனால் பாடசாலையை விட்டு நீங்கும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் மேலும் விரிவடையும்" என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் மொத்தமாக 15 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அதற்கும் மேலதிகமாக இவ் வாண்டில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் கிளைகள் இலங்கையில் நிறுவப்படவுள்ளன. இலங்கை அரசிறையின் 9 வீதம் கல்விச் செலவுகளுக்காக ஒதுக்கப்படுகின்றன. அவற்றில் சுமார் 4.1 வீதச் செலவு சிறுபிள்ளைக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரைக்குமான முறைசார் கல்விக்காக ஒதுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இத் திட்ட முன்மொழிவுகளில் ஏற்கனவே இலங்கையில் பல்கலைக்கழகப் பட்டத்திற்கு மாற்றீடான பட்டங்களை வழங்கவென உருவாக்கப்பட்ட "உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின்" நிலை என்னவாகவுள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஏனெனில் கடந்த கால உரையாடல்களில் இவ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களே பல்கலைக்கழகக் கல்லூரிகளாக மாற்றப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## திருமலையில் சுதந்திர....

இக் கலாசார அணிவகுப்பை கலை கலாசார அமைச்சு, கல்வி அமைச்சுடனும், கிழக்கு மாகாண சபையுடனும் இணைந்து நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

65வது சுதந்திர தினத்தினை யொட்டி மத வைபவங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பௌத்த மத வைபவம் வில்கம் விகாரையின் ரஜமகா விகாரையிலும், சைவ மத வைபவம் திருக்கோணேஸ்வரராலயத்திலும், முஸ்லிம் மத வைபவம் முகைதீன் அன்வர் ஜும்மா பள்ளிவாயலிலும், கிறிஸ்தவ மத வைபவம் புனித மரியாள் பேராலயத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருமலை வாழ் மக்கள் அனைவரையும் இவ் விழாவிற்கு வருகை தருமாறு அரசின் சார்பில் பொது விவகார அமைச்சர் கோரியுள்ளார். சுமார் 100,000 பொதுமக்களை இச் சுதந்திர தின வைபவத்திற்கு எதிர்பார்ப்பதாகவும் அவ்வாறு வருகை தரும் மக்களுக்கான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்விக்கு பெரும் நிதிச் செலவு செய்யும் கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண சபை 2013ம் ஆண்டுக்கான செலவினங்களில் கல்விக்காக பெருமளவு தொகையினை செலவழிக்க உள்ளது. இதற்கான நிதி மூலங்களாக பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றுதல் என்னும் கொடையின் ஊடாக 340,000,000 ரூபாவையும், யுனிசெப் ஊடாக 40,000,000 ரூபாவையும், ஆயிரம் பாடசாலைத் திட்டம் ஊடாக 40,000,000 ரூபாவையும் பெறவுள்ளது.

ஆனாலும் சென்ற வருடத்தில் பெற்ற கல்வி அபிவிருத்திக் கொடைகள் இந்த முறை கிடைக்கவில்லை. அதைப் போக்க மத்திய அரசால் கிடைக்கப் பெறும் பிரமாண அடிப்படைக் கொடைகள், மாகாண விசேட அபிவிருத்திக் கொடைகள் மூலம் செலவுகள் ஈடு செய்யப்பட்டு கல்வி அமைச்சு மற்றும் கல்வித்திணைக்களங்கள் ஊடக 1ம் நிலைக் கல்விக்கு 3,194,400,000 ரூபாவும், 2ம் நிலைக் கல்விக்கு 4,290,100,000, விசேட கல்விக்கு 10,000,000 ரூபாவும், முறைசாரக் கல்விக்கு 9,000,000 ரூபாவும் இந்த வருடத்தில் செலவு செய்யப்படவுள்ளன.

இச் செலவுகள் கல்வி அமைச்சின் ஊடாக 139,552,000 ரூபாவும் கல்வித் திணைக்களங்கள் ஊடாக 7937,080,000 ரூபாவும் செலவு செய்யப்படும் என கிழக்கு மாகாண சபையால் அரச நிறுவங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் மூலம் அறியக் கிடைக்கிறது.

## கிழக்கு ஆளுனரை சந்தித்தது ஆஸி நாடாளுமன்றக் குழு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி பிரதித் தலைவர் தலைமையிலான அவுஸ்திரேலிய நாடாளுமன்ற குழுவினர் புதன்கிழமை கிழக்கு ஆளுனர் மொஹான் விஜேவிக்கிரமவை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் அவுஸ்திரேலிய எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் ஜீலிபிஷப் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரங்களை ஆளுனரிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

## கணனிப் பயிற்சி பெற்றனர் நூலகர்கள்

கிழக்கு மாகாண நூலகர்களுக்கு இருநாள் கணனிப் பயிற்சியை கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் வழங்கியுள்ளது. திருக்கோணமலையிலுள்ள அத் திணைக்களத்தின் கணனிக் கூடத்தில் 17.1.2013 அன்று ஆரம்பமாகிய இப் பயிற்சி நெறியானது வலைப்பின்னல் மற்றும் இலத்திரனியல் அஞ்சல் பற்றியதாக இருந்தது.

## கிழக்கின் முதலமைச்சர் – USAID சந்திப்பு

கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பாய் கிழக்கின் முதலமைச்சரை அமெரிக்க உதவி நிறுவனம் சந்தித்துப் பேசியது.

முதலமைச்சர் செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் யு எஸ் எய்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான பொருளாதார, அபிவிருத்தி விவகாரப் பணிப்பாளர் போல் ரிச்சட்சன் கலந்து கொண்டார்.

முதலமைச்சருடன் இலங்கையின் கடற்றொழில் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி கீர்த்திசிறி அவர்களும் கடற்றொழில் அமைச்சின் இணைப்புச் செயலாளர் அனுராத [illegible] கொண்டனர்.

## ஜம்மியதுல் உலமா...

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான இவர் உடனடியாகவே புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் புல்மோட்டை மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஆவார். அத்துடன் பல சமூக அமைப்புக்களிலும் அங்கத்தவர் ஆவார்.

தனிப்பட்ட பகை காரணமாகவே இத் தாக்குதல் நிகழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

காவல்துறையின் விசாரணைகளுக்குப் பிறகே உண்மை தெரியவரும் எனப் பிரதேச வாசியொருவர் தெரிவித்தார்.

## மின்கட்டண உயர்விற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

பொது மக்கள் பாவனை அதிகார சபையிடம் இலங்கை மின்சார சபையானது கட்டண அதிகரிப்பிற்கான முன்மொழிவினை மேற்கொண்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்ம அபயவிக்ரம தெரிவித்தார். இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் தற்போது வரை இலங்கை மின்சார சபைக்கு வழங்கி வந்த மானியத்தை இடைநிறுத்தியுள்ளதால் எரிமின் சக்தியைப் பெற்றுக்கொள்ளும் செலவு அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிகரித்துள்ள செலவை மக்கள் மீது சுமத்தாமல் தவிர்ப்பதற்கு 24 பில்லியன் ரூபா நட்டத்தை திறைசேரி பொறுப்பேற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நட்டத்தை திறைசேரி பொறுப்பேற்காது விடுமானால் மின் கட்டண உயர்வை யாராலும் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சனாதிபதியின் நியமனம்...

மாவட்டத்தின் கௌரவ. சுசந்த புஞ்சி நிலமே அவர்கள் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இம் மாற்றங்கள் ஊடாக புதிய அமைச்சரவை 102 அங்கத்தவர்களைக் கொண்டதாக மாற்றமடைகின்றது. இந் நூற்றி இரண்டு அங்கத்தவர்களில் 67 அமைச்சர்கள், 30 பிரதி அமைச்சர்கள், 2 திட்ட அமைச்சர்கள், 2 கண்காணிப்புப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சுக்கள் சிலவும் இவ்வமைச்சரவை மாற்றத்தின் போது உருவாக்கப்பட்டுள்ளது. அவை முறையே சீனித் தொழிற்றுறை அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, பௌதீகவியல் பூங்கா மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அமைச்சு, கல்விச் சேவைகள் அமைச்சு மற்றும் வனசீவராசிகளின் பாதுகாப்பு அமைச்சு என்பனவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தெரிந்து கொள்ளுங்கள்...

- மனித உடல்களில் சுமார் 6 கோடியே 50 லட்சம் செல்கள் இருகின்றன.
- ஒரு புள்ளி அளவு இடத்தை 70,000 (எழுபதாயிரம்) அமிபாக்களால் நிரப்ப முடியும்.
- மனித உடலில் மட்டும் 17,000 வகை நுண்கிருமிகள் வாழ்கின்றன.
- புற்று நோய் உட்பட எந்த நோயுமே வராத ஒரே உயிரினம் - சுறாமீன்.
- சீனாவில் ஒரு மனிதனின் பிறந்தநாள் அவன் தாய் வயிற்று கருவில் உருவாகும் நாளில் இருந்தே கணக்கிடப்படுகிறது.
- சுகபிரசவம் அல்லாமல் தன் தாயின் வயிற்றில் இருந்து கிழித்து வெளியே எடுக்கப்பட்டவர் ஜூலியஸ் சீசர். அதனால்தான் இந்த முறைக்கு சீசரியன் என்று பெயர் வந்தது.

## சித்தார்த்தர்

இளவரசர் சித்தார்த்தர் எனும் இயற்பெயருடைய கௌதம புத்தர் பெரும் சமயங்களுள் ஒன்றான பௌத்த சமயத்தை நிறுவியவராவார். சித்தார்த்தர் நேபாள எல்லையின் அருகிலுள்ள கபில வஸ்து எனும் நகரை ஆண்டு வந்த மன்னரின் மைந்தர் (கௌதம குடும்பத்தையும் சாக்கிய குலத்தையும் சேர்ந்த) சித்தார்த்தர் இன்றைய நேபாள எல்லைக்குள்ளிருக்கும் லும்பினியில் கி.மு. 563 இல் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. அவர் தமது 16 ஆம் வயதில் ஒத்த வயதுள்ள உறவினளைத் திருமணம் செய்து கொண்டார். செல்வம் கொழிக்கும் அரண்மனையில் பிறந்த சித்தார்த்தர் இளவரசருக்கு இன்ப நலன்களுக்குக் குறைவில்லை. ஆயினும் அவர் ஆழ்ந்த அதிருப்தியடைந்திருந்தார். மனிதருள் பலர் ஏழையாக இருப்பதையும், தொடர்ந்து வறுமையில் துன்புறுவதையும், எல்லோரும் நோயுற்று இறுதியில் இறப்பதையும் கண்டார். மறைந்து போகும் இன்பங்களை விட மேலானதொன்று வாழ்க்கையில் உண்டென்றும், அவற்றை எல்லாம் துன்பமும் இறப்பும் விரைவில் அழித்தொழிக்கும் என்றும் சித்தார்த்தர் கருதினார். கௌதமர் தமது 29 ஆம் வயதில் தம் மூத்த மகன் பிறந்ததும் தாம் வாழ்ந்து வந்த வாழ்கையை துறந்து உண்மையை நாடுவதில் முழு முயற்சியுடன் ஈடுபடத் தீர்மானித்தார். தம் மனைவி, மழலை மகன், உடமைகள் எல்லாம் துறந்து அரண்மனையை விட்டு வெளியேறி, கையில் காசின்றி அலைந்து திரிந்தார். சிறிது காலம் அவர் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த அறவோரிடம் பயின்றார். அவர்களுடைய போதனைகளை நன்கு கற்ற பின், மனித வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் காட்டிய வழி தமக்கு மன நிறைவளிக்கவில்லையெனக் கண்டார். கடுமையான துறவே உண்மையான அறிவை அடையும் வழியென்று அப்போது பரவலாக நம்பப்பட்டு வந்தது. ஆகவே கௌதமரும் கடுந்துறவியாக முயன்று, பல ஆண்டுகளாக கடும் நோன்பையும், ஒறுத்தலையும் மேற் கொண்டார். ஆயினும் நாளடைவில் உடலை வருத்துவதால் உள்ளம் குழம்புவதையும் உண்மையான அறிவை அடைய இயலவில்லை என்பதையும் உணர்ந்தார். ஆகவே அவர் வழக்கம் போல் உண்டு, கடுந்துறவைக் கைவிட்டார். வாழ்க்கைப் பிரச்சினைக் களுக்குத் தீர்வு காண அவர் தனிமையில் கடுஞ்சிந்தனையில் ஆழ்ந்தார். இறுதியில் ஒரு நாள் மாலையில் அவர் ஒரு பெரிய அத்தி மரத்தடியில் அமர்ந்திருந்த போது, தம்மைக் குழப்பிய பிரச்சினை-களுக்கெல்லாம் தீர்வு கிடைப்பது போல் அவருக்கு தோன்றியது. சித்தார்த்தர் இரவு முழுவதும் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தார். மறுநாள் காலையில் தாம் 'அறவொளி பெற்ற' ஒரு புத்தர் என்றும் உறுதியாக உணர்ந்தார். அப்போது அவருக்கு 35 வயது. எஞ்சிய 45 ஆண்டுகளில் அவர் வட இந்தியா முழுவதும் சென்று கேட்க விரும்பிய அனைவருக்கும் தமது புதிய கோட்பாட்டைப் போதித்து வந்தார். கி.மு. 483 இல் அவர் இறப்பதற்குள் ஆயிரக்கணக்கான மக்களை மதம் மாற்றினார். அவர் கூறியவை எழுதப் பெறவில்லையெனினும், அவருடைய சீடர்கள் அவர் போதனைகள் பலவற்றை மனப்பாடம் செய்திருந்தனர். அவை வாய்மொழி மூலமாகத் தலைமுறையாகப் பரவின. புத்தரின் முக்கியப் போதனைகளைப் பௌத்தர்கள் 'நான்கு உயர் உண்மைகள்' எனச் சுருக்கமாகக் கூறுவர். முதலாவது, மனித வாழ்க்கை இயல்பாகவே துயருடையது. இரண்டாவது, இத்துயரின் காரணம் மனிதனின் தன்னலமும் ஆசையுமாகும். மூன்றாவது, தனி மனிதன் தன்னலத்தையும் ஆசையையும் அடக்கிவிடலாம். எல்லா ஆசைகளும் ஆவல்களும் ஒழிந்த இறுதி நிலை ('அணைதல் அல்லது அவிதல்' எனப் பொருள்படும்) 'நிர்வாணம்' எனப்படும். நான்காவது, தன்னலம், ஆசை ஆகியவற்றிலிருந்து தப்பிக்கும் 'எட்டு வகைப் பாதை' எனப்படும். அவை, நேர்மையான பேச்சு, நேர்மையான செயல், நேர்மையான வாழ்க்கை, நேர்மையான முயற்சி, நேர்மையான தியானம்...

பௌத்த சமயத்தில் இன வேறுபாடின்றி அனைவரும் சேரலாம்.




## பளபளப்பான ஆரோக்கியமான பற்களைப் பெறவேண்டுமா!



முகத்திற்கு மேலும் அழகு சேர்ப்பது அழகிய புன்னகை. பற்கள் ஆரோக்கியமானதாகவும் வாய் துர்நாற்றமின்றியும் இருந்தால் மட்டுமே எந்நேரமும் எம்மால் சிரித்தபடி இருக்கமுடியும். அழகான பற்களைப் பெறுவதற்கும் பளிச்சென ஆக்குவதற்கும் சில குறிப்புக்கள் கீழே:

- பச்சை நெல்லிக்காயை பற்களால் கடித்துச் சாப்பிட்டால் பற்களின் கறை நீங்கும்.
- பற்கள் பளிச்சென இருப்பதற்கு எலுமிச்சைச் சாற்றுடன் தேன் கலந்து சாப்பிட்டு வரலாம்.
- கரும்பைச் சாப்பிட்டால் பற்கள் சுத்தமாகுவதுடன் பலமாகவும் இருக்கும்.
- பல் தேய்க்கும் பிரஷ்ஷில் உப்பைத் தொட்டு எலுமிச்சைச் சாறு சில சொட்டுக்களையும் சேர்த்து பல் துலக்கினால் பற்களின் மஞ்சள் நிறம் மாறும்.
- எலுமிச்சை பழத்தோல்களை காய வைத்து பொடியாக்கி உப்பு சேர்த்து நல்லெண்ணெயில் குழைத்து பற்களை துலக்க பற்கள் பளபளவென மாறும்.
- சாப்பிட்ட பின்பு நன்கு வாயை கொப்பளிக்க வேண்டும். முடிந்தால் உப்பு கலந்த நீரினால் கொப்பளிப்பது பற்களில் நோய்கள் ஏற்படாமல் தடுக்கும். அத்துடன் வாயில் துர்நாற்றம் ஏற்படாமலும் தடுக்கும்.
- வாய் நாற்றம் இருப்பதாக உணரும் போது லேசான சுடுநீரில் சிறிதளவு உப்பு சேர்த்து வாய் கொப்பளிப்பது சிறந்தது.
- மாங்காய், கரும்பு, ஆரஞ்சுப் பழம், அன்னாசி இவற்றை பற்களால் கடித்துச் சாப்பிடுவதனாலும் துர்நாற்றத்தைத் தடுக்க முடியும்.



## பெண்கள் என்றும் இளமையுடன் இருக்க

சிலருக்கு இளமையிலேய தமது சருமங்களில் சுருக்கங்கள் விழுவது இயற்கை இதனால் வயதாகிவிட்டது போன்ற தோற்றத்தை தரும். இந்த மன உளைச்சலில் இருந்து தப்பித்துக்கொள்ள இதே வழி,

உங்களது தோல் சுருக்கம் மறைந்து என்றேண்டும் இளமைத்தோற்றதில் அழகுடன் திகழ்வதட்கு கீழ் கண்ட குறிப்புகளை பயன்படுத்தலாம்

முதலில் மூன்று முட்டைகளை எடுத்து ஒரு சுத்தமான குவளையில் உடைத்து ஊற்றி நன்றாக கலக்கிகொள்ளவும், பின் ஒரு தேக்கரண்டி தேன், இரண்டு தேக்கரண்டி பால், ½ தேக்கரண்டி ஒலிவ் எண்ணெய் இவற்றுடன் ¼ தேக்கரண்டி பாதம் எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றை எடுத்து முட்டைக்கலவைக்குள் சேர்த்து நன்றாக கலந்து எடுக்கவும் இதனுள் சிறிதளவு சோப் துண்டுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கலந்தேடுக்கப்பட்ட இக்கலவையை உடல் முழுவதும் தேய்த்து 10 நிமிடங்கள் ஊரை விட்டு பின் குளிக்கவும். வாரம் ஒருமுறை இவ்வாறு செய்து வந்தால் இரண்டு மாதங்களின் பின் தோல் சுருக்கங்கள் நீங்கி மேனி பளபளப்பாகும் அத்துடன் சருமம் புதுப் பொலிவு பெரும்.

[illegible]

### பெண் பருவமெய்திய நாட்களும் விளைவுகளும்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | - | உடல்நல குறைவு |
| திங்கள் | - | சிறந்த கற்பு |
| செவ்வாய் | - | உடல்நல குறைவு |
| புதன் | - | அதிக குழந்தை |
| வியாழன் | - | அழிவில்லா செல்வம் |
| வெள்ளி | - | இன்பம், செல்வம் |
| சனி | - | செல்வக் குறைவு |

## இறைச்சிக் குருமா

***தேவையான பொருட்கள் :*** ஆட்டிறைச்சி அல்லது கோழி இறைச்சி - 500 கிராம், தேங்காயெண்ணெய் - 5 மே.கரண்டி, கராம்பு - 10, கறுவா - 3 சிறிய துண்டுகள், ஏலம் - 6, தக்காளிப்பழம் - 1, வெங்காயம் - 100 கிராம், இஞ்சி - அளவான துண்டு, உள்ளி - 4 பல், கடுகு - 8, மல்லித்தூள் - 1 மே.கரண்டி (நிரப்பி), தனிமிளகாய்த்தூள் - 1 மே.கரண்டி, தயிர் - 1/4 தம்ளர், தேங்காய்ப்பால் - 1/2 தம்ளர், கறிவேப்பிலை - 2 நெட்டு, சோளம்மாவு - 1 தே.கரண்டி (நிரப்பி), உப்பு - அளவிற்கு, தேசிப்புளி - அளவிற்கு, கொதிநீர் - 1/2 தம்ளர், ரேஸ்ட் மேக்கர் - அளவிற்கு

***செய்முறை :*** இறைச்சியைத் துப்பரவாக்கிக் கழுவி ஓரளவான பெரிய துண்டுகளாக வெட்டி எடுக்கவும். மல்லித்தூள், மிளகாய்த் தூள் என்பவற்றைக் கலந்து 3 மே. கரண்டி தண்ணீர் விட்டுச்சேர்த்து வைக்கவும். அத்துடன் ஏலம், கறுவா, கராம்பு என்பவற்றை பட்டுப்போல இடித்து



வேறாக எடுத்து வைக்கவும். பின்னர் வெங்காயம், பச்சைமிளகாய், உள்ளி, இஞ்சி, தக்காளிப்பழம் என்பவற்றைத் துப்பரவாக்கிக் கழுவித் தனித்தனியாகச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி எடுக்கவும்.

பின்பு தாச்சியில் 2 மே.கரண்டி எண்ணெயைவிட்டுக் காய்ந்த பின்னர் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து இடித்த ஏலம், கறுவா, கராம்பு என்பவற்றையிட்டு சிறிது நேரம் வதங்கவிட்டு பின்பு வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய், இஞ்சி, உள்ளி (இஞ்சி மற்றும் உள்ளியை சேர்த்து இடித்தும் போடலாம்) என்பவற்றையிட்டு பொன்னிறமாகும் வரை வதங்க விட்டு வதங்கிய பின்பு அள்ளியெடுத்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் மிகுதியாக இருக்கும் எண்ணெயில் மேலும் 3 மே.கரண்டி எண்ணையும் விட்டுக் கொதித்த பின்பு அதில் ஊற வைத்துள்ள மிளகாய்த்தூள் கலவையைக் கொட்டி நன்கு கிளறி அதில் வெட்டி வைத்துள்ள இறைச்சி, தயிர், அளவான உப்பு, கொதிநீர் என்பவற்றையிட்டு நன்கு சேர்த்து பின் மூடிவிடவும். இறைச்சி முக்கால் பதமாக வெந்த பின்பு வதக்கி வைத்துள்ள வெங்காயம், தக்காளிப்பழம் என்பவற்றை இட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின்பு மெல்லிய நெருப்பில் மூடி வதங்க விடவும். நீர்த் தன்மை சுண்டிக் கறி திரளத் தொடங்கியதும் தேங்காய்ப் பாலில் சோளமாவைச் சேர்த்து அக்கலவையை இட்டு கிளறிச் சேர்த்துக் கறி பிரட்டல் பதத்தையடைந்ததும் இறக்கி தேசிப்புளி அளவாக சேர்த்துக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### வடக்கின் பிரதேச 13 பிரதேச சபைகளுக்கான நிதியினை அரசு மீளப்பெற்றது

வடமாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் உள்ள பிரதேச சபைகளுக்கென ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியான சுமார் 560 மில்லியன் ரூபாய்களை அரசு மீளப்பெற்றுக்கொண்டுள்ளது. இந்நிதி கிராம சபையின் தெருக்கள், கிராம சபைக்கான புதிய கட்டட நிர்மாணிப்புக்கள், புதிய சந்தைத் தொகுதிகளை அமைத்தல் போன்றவற்றுக்கென 2013ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தவை.

பிரதேச சபையின் அங்கத்தவர் ஒருவர் "இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மீளப்பெற்றுக் கொண்டமையானது முற்று முழுதாக அரசியல் நோக்கங்கொண்டவை" என குற்றஞ்சாட்டினார். "இவ்வாறு நாம் மக்களுக்கான அபிவிருத்தி பணியில் ஈடுபடும் போது எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமக்கு தமது வாக்குகளை அளித்துவிடுவார்கள் என அவர்கள் அஞ்சுகிறார்கள். எது எவ்வாறு இருப்பினும் வட மாகாண மக்களை பிரதிநிதித்துவம் செய்வது யார் என்பதை அம்மக்கள் நன்றாக அறிவார்கள்" என வல்வட்டித்துறையின் பிரதேச சபை உறுப்பினரான M.K. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். வடக்கின் 17 உள்ளூர் ஆட்சி சபைகளின் 13 உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### மேலும் பல வலைத்தளங்கள் முடங்கின...

கடந்த சில வாரங்களாக இலங்கையின் பெரும்பாலான வலைத்தளங்களை முடக்கிவரும் திருடர்களால் கடந்த வாரம் இலங்கை முதலீட்டுச் சபை அமைச்சர் மஹிந்தாகந்த சுளுத்கமகே, நெலும் பொகுன கலையகம் ஆகியவற்றின் தளங்களும் முடக்கப்பட்டன. இவ்வலைப்பின்னல் திருடர்களின் சங்கீத பெயராக "Davy Jones" காணப்படுகின்றது. இத்திருடர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் படி இலங்கையின் முதலீட்டுச் சபை வலைப்பின்னலிலிருந்து 2000 முதலீட்டாளர்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன் விளையாட்டுத் துறை அமைச்சின் தகவல்களும் வெளிப்பாய்ந்து விட்டதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

### பொதுக்கிணற்றில் பெண் வல்லுறவு

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அருகில் பசல் மாவத்தையில் பொதுக்கிணற்றுடன் கூடிய குளியல் அறையில் முச்சக்கர வண்டிச் சாரதியால் பெண்ணொருவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இரவு நேரத்தில் பெண்ணொருவரின் அழுகுரலை கேட்ட அயலவர்கள் அவசர உதவி காவல்துறை இலக்கமான 111 இற்கு மேற்கொண்ட தொலைபேசி அழைப்பினைத் தொடர்ந்து மிரிகான காவல்துறை அலுவலகத்தைச் சேர்ந்த காவல்துறையினர் வேகமாக அவ்விடத்தை வந்தடைந்தனர். அங்கு பெண்ணொருவரை முச்சக்கர வண்டிச் சாரதி வன்புணர்ந்து கொண்டிருந்ததும் அவருக்குதவியாக அவரது நண்பர் செயற்பட்டதையும் கண்டுபிடித்து அவர்களனைவரையும் கைது செய்துள்ளனர். புலனாய்வின் போது குறித்த பெண் ஆடைத்தொழிற்சாலைகளில் வெட்டுத் துணிகளை வாங்குவபர் என தெரிய வருகின்றது. அன்றைய தினம் மகரகம நோக்கி பஸ் வண்டியில் பயணம் செய்த இவர் தான் இறங்க வேண்டிய தரிப்பிடத்துக்கு முன்னராக பஸ்ஸிலிருந்து இறங்கியுள்ளார். அதைத்தொடர்ந்து அவர் தனது இருப்பிடம் நோக்கி நடந்து செல்லும் பொழுது முச்சக்கர வண்டியில் வந்த மூவர் அவரை முச்சக்கர வண்டியில் இழுத்துத் தூக்கிச் சென்றதாகவும் தனது கத்தலுக்கு உதவி செய்ய எவரும் வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனினும் முச்சக்கர வண்டிச் சாரதி குறித்த பெண் பணத்துக்காக தன்னுடன் உடலுறவுக் கொள்வதற்கு தயாரென தனது விருப்பத்தை தெரிவித்திருந்தாலேயே தானும் தனது நண்பர்களும் அப்பெண்ணை குறித்த இடத்திற்கு கூட்டி வந்ததாக தெரிவித்துள்ளார்.

## The Sunday Observer:

### இலங்கை மின்சார சபையினை தனியார் மயப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க அவர்களின் கூற்றுப்படி அரசினால் இலங்கை மின்சார சபையை தனியார் மயப்படுத்தும் திட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை என தெரியவருகின்றது. இலங்கை மின்சார சபையில் சில வினைத்திறனற்ற செயற்பாடுகள் இருந்தாலும் கூட அதை நிவர்த்தி செய்யும் வகையில் நிறுவன கட்டமைப்பிலும், நிர்வாகத்திலும் சில மாற்றங்கள் உருவாக்கப்படவுள்ளதே ஒழிய அது தனியார் மயப்படுத்தப்படமாட்டாது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை தனியார்மயப்படுத்தப்படுமானால் மின்சாரக் கட்டணங்கள் உடனடியாக 50 வீதத்தால் அதிகரிக்கும். ஏனெனில் இலங்கை மின்சார சபை தற்பொழுது நட்டத்திலேயே இயங்கிக்கொண்டுள்ளது. இந்நட்டத்தை ஈடு செய்வதற்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றிலிருந்து கடன்களைப் பெறுகின்றது. எனவே யாதாயினுமொரு புதிய சமன்பாட்டை, பாவிக்கும் அலகுகளுக்கும் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளுக்குமிடையே பிரயோகிக்க வேண்டிய தேவை எழுகிறது. அந்த அடிப்படையிலேயே மின்சாரக் கட்டணங்களின் பெறுமதி தீர்மானிக்கப்படவேண்டும்.

### பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் கூடியளவு வேதனத்தை எதிர்பார்க்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் 31, 2013 உடன் தற்போதுள்ள பெருந்தோட்டத்துறை தொழிலாளிகளின் கூட்டொப்பந்தம் முடிவுக்கு வருகின்றது. அடுத்த புதிய கூட்டொப்பந்தத்திலாவது சிறந்த சம்பள முறையொன்றை தொழிலாளர்களுக்காக பெற்றுக்கொள்வதற்கான முன்னெடுப்புக்களில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஜூன் 6, 2011 இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினூடாக தற்போது 515 ரூபாவை பெருந்தோட்ட ஊழியர்கள் பெற்றுக்கொள்கின்றனர். இத்தொகையில் அடிப்படைச் சம்பளமாக ரூபா 380 உம் உற்பத்தித்திறன் ஊக்குவிப்புக்கு ரூபா 105 உம் விலைப்பங்கு உதவியாக ரூபா 30 உம் வழங்கப்படுகிறது.

### வனத்திணைக்கள அதிகாரிகளை தேடி வனத்தினுள் வேட்டை

ஹம்பகமுவவின் வனத்திணைக்களத்தில் பணியாற்றும் உதவி வார்டன் உட்பட 8 வனதிணைக்கள அலுவலகர்களை தேடி மொனராகல பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஒரு நாளின் பின் முடிவுக்கு வந்துள்ளது. 2 காவல்துறை அலுவலர் உட்பட நால்வரை நடுக்காட்டினுள் வைத்து இந்த 8 அலுவலகர்களும் கடுமையாக தாக்கி நினைவிழக்கச் செய்ததன் பின் காட்டினுள் தலைமறைவாகி இருந்தனர்.

ஒருகண்கல காட்டினுள் கஞ்சா பயிரிடுகை நிகழ்வதாக கிடைத்த தகவலை அடுத்து இரண்டு காவல்துறை அலுவலகர்களும், வழிகாட்டிகளாக இரண்டு பேரும் அந்த இடத்தைப் பார்ப்பதற்காக காட்டினுள் பயணித்த போதே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது. காணாமற்போன வனத்திணைக்கள அலுவலகர்களை கைது செய்வதற்கான பிடியாணையை நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்ட காவல்துறை விசேட அதிரடிப்படையினர் காட்டைச் சுற்றிவளைத்து இவர்களை கைது செய்திருந்தனர். இவர்கள் மீது மனிதக்கடத்தல், தடுத்து வைத்தல், தாக்குதல், காவல்துறையினரை கடமை புரியவிடாது தடுத்தல் போன்ற குற்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

### கைதிகளை விசாரிக்கும் பொழுது அரச வழக்கறிஞர்கள் காவல்துறை அலுவலகத்தில்

கைதிகளை காவல்துறையினர் அலுவலகத்தில் வைத்து விசாரிக்கும் போது அதற்குதவும் நோக்கில் காவல்துறை அலுவலகங்களிலேயே அரச சட்டவாளர்களை பேணும் முயற்சி தொடர்பான சாத்தியப்பாடுகளை நீதியமைச்சு முன்னெடுத்துள்ளது. [illegible] நடவடிக்கைகளை [illegible] மறுசீரமைக்கும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே இந்நடவடிக்கை முன்மொழியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### அரசுடன் இணைந்து செயற்படும் முஸ்லீம் கட்சிகள் அரசினை நோக்கி எச்சரிக்கை


குளியாப்பிட்டிய மற்றும் மகரகம பகுதிகளில் முஸ்லீம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து அரசுடன் இணைந்து செயற்படும் முஸ்லீம் கட்சிகள் அரசுக்கு தமது நெருக்குதல்களைக் கொடுத்துள்ளது. வலைப்பின்னலின் ஃபேஸ் புக், டுவிட்டர், புளொக்ஸ் ஆகியவற்றினூடாகவும் முஸ்லீம்களுக்கு எதிராக பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. "அரசாங்கம் உடனடியாக இவ்வாறு நிகழும் எதிர்ப்பியக்கங்களுக்கு எதிரான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது. "அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் ஏனைய முஸ்லீம் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏனைய முஸ்லீம் கட்சிகளுடன் சேர்ந்து இதற்கான நடவடிக்கையினை எடுக்கத் தயாராயிருப்பதாக" இலங்கை முஸ்லீம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார். அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸின் உறுப்பினர் அமீர் அலியும் தமது கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து இப்பிரச்சனைக்கு தீர்வொன்றைக் காண முயற்சிப்பதாய் தெரிவித்துள்ளார். அரசின் அமைச்சரான A.H.M.பௌசி கருத்துத் தெரிவிக்கையில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைய கூட்டத்தொடர் நிகழும் பொழுது இலங்கைக்கெதிரான எதிர்ப்பார்ப்பாட்டம் ஒன்றை இலங்கையில் செய்வதற்கான ஏற்பாடுகள் இருப்பதாக தெரிவித்தார். அத்துடன் முஸ்லீம் காங்கிரசுக்கெதிராக புத்த பிக்குளால் ஏற்படுத்தப்படும் ஆர்ப்பாட்டங்களின் ஆணிவேரான ஹலால் சான்றிதழ் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஆணையாளருடன் கலந்துரையாடுவதற்கு ஜம்மியத்துள் உலமா சபையின் இலங்கைத் தலைவர் ஜெனிவா நோக்கிப் பயணமாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### பிரித்தானியரானார் சிசிலி கொத்தலாவல

பிரபல்யமான கோல்டன் கீ நிதி மோசடியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டு வரும் சிசிலி கொத்தலாவல இலங்கையின் குடியுரிமையை விடுத்து ஐக்கிய இராச்சியத்தின் குடியுரிமையை பெற்றுக்கொண்டுள்ளார். 2009 இல் பிணையில் விடுவிக்கப்பட்ட செலிங்கோ குழுமத்தின் தலைவரின் மனைவியான இவர், 2009 இல் இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு தப்பியோடியிருந்தார். அதைத் தொடர்ந்து பிரித்தானியாவுக்கு பயணித்திருந்த இவர் பின்னர் பிரித்தானிய குடியுரிமையைப் பெற்றுள்ளார். சுமார் 26 பில்லியன் ரூபாய்கள் சூறையாடப்பட்ட கோல்டன் கீ முதலீட்டுத் திட்டத்தில் பெருமளவு இலங்கையர்கள் முதலீடு செய்து தங்களது பணத்தை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து கோல்டன் கீ நிறுவனத்தின் தலைவர் ஜோன் கொத்தலாவவும் அக் கம்பனியின் பணிப்பாளர்களும் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர். எனினும் முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய தேவையினை நிறைவு செய்வதற்காக அவர்கள் அனைவரும் சுய பிணையில் வெளியே விடப்பட்டுள்ளனர். இலங்கையின் அதியுயர் விருதான தேச மாண்ய விருதையும், சிங்கப்பூரினால் வழங்கப்பட்ட கௌரவ தூதுவர் விருதையும் லலித் கொத்தலாவ கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்விருதுகளில் சிங்கப்பூரினால் வழங்கப்பட்ட விருது மீள பெற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழு ஐக்கிய நாட்டின் காலக்கிரம ஆய்வு அறிக்கையினை கருத்தில் கொள்ளவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 22வது கூட்டத்தொடர் எதிர்வரும் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக காலக்கிரம ஆய்வுக் குழுவால் 209 முன்மொழிவுகள் இலங்கைக்காக முன்வைக்கப்பட்டபோதும் அதில் 111 இனை இலங்கை ஏற்றுக்கொண்டும் எஞ்சிய 99யை இலங்கை மறுத்தும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஆஸ்திரேலிய ஓபனில் புதிய வரலாறு படைத்த ஜோகோவிச்



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் செர்பியா நாட்டு வீரர் ஜோகோவிச் புதிய வரலாறு படைத்தார். நேற்று நடந்த இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான அவர் 6-7 (2-7), 7-6 (7-3), 6-3, 6-2 என்ற கணக்கில் 3-ம் நிலை வீரர் முர்ரேயை (இங்கிலாந்து) தோற்கடித்தார். ஜோகோவிச் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை தொடர்ந்து 3-வது முறையாக வென்று ஹாட்ரிக் சாதனை படைத்தார். 2011-ம் ஆண்டும், கடந்த ஆண்டும் அவர் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று இருந்தார். டென்னிசில் ஓபன் அத்தியாயம் 1968-ம் ஆண்டு தொடங்கிய பிறகு ஹாட்ரிக் சாதனை படைத்த முதல் வீரர் என்ற வரலாற்றை ஜோகோவிச் பெற்றார். 1931-33 ஆண்டு வரை ஜேக்கிராபோர்டும், ராய் எமர்சன் 1963-67 வரையும் தொடர்ந்து ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று இருந்தனர். ஜோகோவிச் ஒட்டு மொத்தமாக ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை 4 முறை வென்றுள்ளார். 2008-ம் ஆண்டிலும் அவர் பட்டம் வென்றார். இதன்மூலம் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை அதிகமுறை வென்ற வீரர்களில் 2-வது இடத்தில் இருக்கும் அகாசி (அமெரிக்கா), ரோஜர் பெடரருடன் (சுவிட்சர்லாந்து) இணைந்து கொண்டார். அகாசி 1995, 2000, 2001, 2003 ஆண்டுகளிலும், பெடரர் 2004, 2006, 2007, 2010 ஆண்டுகளிலும் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று இருந்தனர். ஜோகோவிச் கைப்பற்றிய 6-வது கிராண்ட்சிலாம் பட்டம் ஆகும். விம்பிள்டன், அமெரிக்க ஓபன் பட்டத்தை (2011) தலா ஒரு முறையும் வென்றுள்ளார். பிரெஞ்சு ஓபன் பட்டத்தை இதுவரை பெறவில்லை.

# "லா லிகா" கால்பந்து போட்டிகளில் இளம் வயதில் 200 கோல்கள்: லயனல் மெஸ்சி சாதனை


மாட்ரிட்டில் நடைபெற்ற 'லா லிகா' கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி, 5-1 என்ற கோல்கணக்கில் ஒசாசுனா அணியை வென்றது. இப்போட்டியில் அர்ஜெண்டினாவின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்சி 4 கோல்கள் அடித்தார். இதன்மூலம் அடுத்தடுத்து 11 'லா லிகா' போட்டிகளில் கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் எட்டினார். இதற்கு முன்பு பார்சிலோ அணிக்காக விளையாடிய மரியானோ மார்ட்டின், பிரேசிலின் ரொனால்டோ ஆகியோர் அடுத்தடுத்து 10 போட்டிகளில் கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. அதனை கடந்த ஆண்டே மெஸ்சி சமன் செய்தது குறிப்பிடத்தக்கது. இந்த சீசன் 'லா லிகா' போட்டிகளில் 33 கோல்கள் அடித்துள்ள மெஸ்சி (வயது 25), லா லிகா போட்டிகளில் 200 கோல்களைக் கடந்த இளம் வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இதுவரை 235 'லா லிகா' போட்டிகளில் ஆடியுள்ள அவர், மொத்தம் 202 கோல்கள் அடித்துள்ளார். இதற்கு முன்பு 7 பேர் 200 கோல்களைக் கடந்து சாதனை படைத்திருந்தாலும், அவர்களில் டெல்மோ சாரா 29வது வயதில் 200 கோல்களைக் கடந்ததே முந்தைய இளம்வயது சாதனையாக இருந்தது. அதனை இப்போது மெஸ்சி முறியடித்துள்ளார். முன்னதாக நடந்த போட்டியில் நடப்பு சாம்பியன் ரியல் மாட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் ஜிடாபி அணியை வென்றது. ரியல் மாட்ரிட் கேப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது 20-வது ஹாட்ரிக் கோலை பதிவு செய்ததுடன், இதுவரை




499 கிளப் போட்டிகளில் 302 கோல்கள் அடித்துள்ளார்.

# அணித் தேர்வாளராக சனத் ஜெயசூரிய

இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளராக முன்னால் அணித்-தலைவர் சனத் ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். சனத் ஜெயசூரிய இலங்கையின் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகக் காணப்படுவதால் அவரது நியமனம் அரசியல் சம்பந்தப்பட்டது என்ற கருத்துக்களை நிராகரித்த சனத் ஜெயசூரிய, இருபது வருடங்களுக்கு மேல் இலங்கைக்காகப் போட்டிகளில் பங்குபற்றியுள்ள நிலையில், தேர்வாளராகப் பதவி வகிக்கும் தகுதி தனக்குள்ளதாகத் தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் கருத்து தெரிவிக்கையில் இளம் வீரர்கள் தங்கள் திறமைகளின் மூலம் நாட்டினைப் பெருமைப்படுத்தியுள்ளதாகவும், இலங்கையில் திறமைகளுக்குக் குறைவில்லை எனவும், அவற்றைச் சரியான முறையில் தயார்படுத்துவதே தேவையாக உள்ளதாகவும் கூறினார்.



# இழந்த டெஸ்டுக்கு இருபதுக்கு இருபதில் பதிலடி

ஆஸ்திரேலியா-இலங்கை அணிகளுக்கிடையிலான 2-வது 20 பந்து பரிமாற்ற கிரிக்கெட் போட்டி மெல்பேர்னில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி இலங்கை அணியை முதலில் துடுப்பாட பணித்தது. முதலில் ஆடிய இலங்கை அணி 20 பந்து பரிமாற்றங்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களை அடித்தது. ஜெயவர்தனே 45 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மெண்டிஸ் 25 ஓட்டங்களும், பெரேரா 35 ஓட்டங்களும் எடுத்தனர். இதையடுத்து 162 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய ஆஸ்திரேலியா, 20 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டை இழந்தது. 10 பந்து பரிமாற்றங்கள் முடிந்த போது மழை பெய்தது. அப்போது ஆஸ்திரேலிய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 60 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மார்ஷ், பெய்லி இருவரும் தலா 22 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டதால், டக்வொர்த் லிவிஸ் விதிப்படி 15 பந்து பரிமாற்றங்களில் 122 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. ஏற்கனவே 10 பந்து பரிமாற்றங்கள் முடிந்துவிட்டது. மீதமுள்ள 5 பந்து பரிமாற்றங்களில் ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு 62 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இந்த கடின இலக்கை எதிர்கொண்ட ஆஸ்திரேலியா, 106 ஓட்டங்களைத் தொட்டபோது பெய்லி 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் 4 பந்துகளில் 16 ஓட்டங்கள் தேவை. ஆனால், 2 பவுண்டரிகள் உள்பட 13 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. மார்' கடைசி வரை ஆட்டமிழக்கமல் 47 ஓட்டங்கள் எடுத்தார்.இந்தப் போட்டியில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பெரேரா தேர்வு செய்யப்பட்டார். ஏற்கனவே, முதல் போட்டியிலும் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தது. இதனால் 2 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது பந்து பரிமாற்ற தொடரை இலங்கை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி, டெஸ்ட் தொடர் இழப்பிற்கு பதிலடி கொடுத்துள்ளது.

# ஆஸி - இலங்கை வீரர்களின் மட்டைக்களத்து வாக்குவாதம் அறைக்குள் சமரசமானது

இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான இறுதி இருபது இருபது சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வீரர் கிளென் மக்ஸ்வெல் இலங்கை வீரர் மஹேல ஜெயவர்தன இருவருக்குமிடையில் வார்த்தை பிரயோக மோதல் ஏற்பட்டது. இரண்டாவது-போட்டியின் கடைசி பந்து பரிமாற்றத்தின் இறுதி பந்தில் 3 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இக்கட்டான சூழ்நிலையில் அவுஸ்திரேலிய அணியினர் காணப்பட்டபோது இறுதிப் பந்தை வீசுவதற்கு இலங்கை வீரர்கள் தாமதிக்க, அதை விரும்பாத துடுப்பாட்ட வீரரான கிளென் மக்ஸ்வெல் இலங்கை வீரர்களுடன் தகராறில் ஈடுபட, இலங்கை வீரர்கள் திரும்பவும் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். இதில் மஹேல ஜெயவர்தன மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மக்ஸ்வெல்லைத் திட்டியிருந்தார். இலங்கை அணி வெற்றிபெற்ற பின்னர் கைகுலுக்கும் போது இரு தரப்பினரிடையே மீண்டும் வாய்த் தர்க்கங்கள் ஏற்பட்டிருந்தன. அதன் போது அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி, விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் ஆகியோரும் இணைந்திருந்தனர். இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள கிளென் மக்ஸ்வெல், போட்டியின் பின்னர் தான் இலங்கை வீரர்களின் அறைக்குள் சென்றதாகவும், தங்கள் அளவை மீறிச் சென்றமைக்காக இலங்கை வீரர்கள் தன்னிடம் மன்னிப்புக் கோரியதாகவும், தானும் மன்னிப்புக் கோரியதாகவும் தெரிவித்துள்ளார். மஹேல ஜெயவர்தனவுடன் தான் சிறந்த உறவைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அந்த உறவு எப்போதும் அவ்வாறே இருக்கும் எனத் தெரிவித்தார். மோதலின் பின்னர் இரு அணியினரும் சமரசம் ஆகிள்ளனர்.

# மகளிர் உலகக் கிண்ணம் சனவரி 31 ம் திகதி ஆரம்பமாகியது

உலக மகளிர் கிண்ண 10வது போட்டிகள் 31ம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகியந்து. இப் போட்டி பெப்ரவரி ,17ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள இந்த அணிகளில் பிரிவு 'ஏ' யில் நடப்பு மகளிர் உலகச் சம்பியனான இங்கிலாந்து அணியுடன் இந்தியா, மேற்கிந்திய தீவுகள், இலங்கை ஆகியன பட்டியலிடப் பட்டுள்ளன. பிரிவு 'பி' யில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நான்கு அணிகளும் இடம்பெற்றுள்ளன.

முதற்சுற்று 'லீக்' முறையில் நடைபெறும். பின்னர் முதலிடத் திலுள்ள ஆறு அணிகளும் 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்கு முன்னேறும். அதன் பின்னர் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகளும் இறுதிப் போட்டிகளில் ஆடும்.

முன்னர் முப்பையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போட்டிகளில் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ளும் போட்டிகள் மட்டும் ஒரிசா மாநிலத்திற்கு மாற்றப் பட்டுள்ளன.

இந்திய பாகிஸ்தான் எல்லை முறுகலை அடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருகோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 02. 02 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.